விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித நாணயங்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-246)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 22 திங்கட்கிழமை (07.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 263

கோப்பாயில் விபத்து

## ஒய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் உயிரிழப்பு



(கரணவாய்)
மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் ஒருவர் பலியானதுடன் மேலும் ஒருவர் படுகாய மடைந்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித் ▷23

## மோட்டார் சைக்கிள் - டிப்பர் விபத்து; குடும்பப் பெண் பலி

தனங்கிளப்பு பகுதியில் துயரம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தனங்கிளப்பு - அறுகுவெளிப் பகுதியில் ஏ32 வீதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். ▷23

விபரீத முடிவெடுத்த

## இளைஞன் உயிரிழப்பு

மாதகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் ஒருவர் விபரீத முடிவெடுத்த ▷23

வீதியால் சென்ற பெண்ணின்

## இரண்டு பவுண் சங்கிலி அறுப்பு

(கரணவாய்)
ஆலயத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய பெண்ணொருவரின் 2 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறி ▷23

## நாட்டுக்கு தேவையற்ற விடயங்கள் 20ஆவது திருத்தத்தில் உள்ளடங்கியுள்ளது

பெரமுன எம்.பி கெவிந்து குமாரதுங்க

(கொழும்பு)
அரசாங்கம் வெளியிட்டுள்ள 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட வரைபில் நாட்டுக்குத் தேவையற்ற விடயங்கள் சில அடங்கி இருப்பதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்துள்ளார்.
இந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட விதிக்கப் ▷23

சுவர் விழுந்ததில்

## இளைஞன் பலி

வவுனியாவில் சோகம்

(வவுனியா)
சுவர் இடிந்து விழுந்ததில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.
குறித்த இளை ▷23

# மிகச் சிறந்த வீராப்புடைய தலைவர்தான் பிரபாகரன்



## எரிக் சொல்ஹெய்ம் புகழாரம்

(ஒஸ்லோ)
விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போரின் இறுதிக் கட்டம் வரை நீண்ட காலம் ஒரு மிகச் சிறந்த வீராப்புடைய தலைவராக இருந்தார் என நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.
(02ஆம் பக்கம் பார்க்க)



காற்றுடன் கூடிய

## மழை பெய்யும்

கடற்றொழிலாளர்களுக்கு

எச்சரிக்கை

(கொழும்பு)
கடற்பகுதிகளில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 70 கிலோமீற்றர் அளவில் வீசும் ▷23

## 13ஐ நீக்கும் தீர்மானம் இல்லை

இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய

3ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க் கட்சி உறுப்பினர்கள் 9 பேர் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு?

(கொழும்பு)
எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
இரு பிரிவைச் சேர்ந்த ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் 20ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்படும்போது, அதற்கு ஆதரவளிப்பது என்று உறுதியளித்துள்ளதாக கூறப்படுகின்றது.
அரசாங்கத்தின் முக்கிய பிரமுகரிடம் அவர் ▷23

வடலியடைப்புப் பகுதியில்

## நான்கு வாள்களுடன் ஒருவர் நேற்றுக் கைது

(யாழ்ப்பாணம்)
பல வருடங்களுக்கு முன்பான வாள்கள் நான்குடன் 32 வயதுடைய ஒருவர் ▷23

## மணிவண்ணன் தலைமையில் இளைஞர் பேரவை உதயம்



(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன் ▷23

## 13ஆவது திருத்தத்தை நீக்கக்கூடாது என்பதில் இந்தியா உறுதியாகவுள்ளது

இந்தியத் தூதுவரின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)
13ஆவது திருத்தம் நடைமுறையில் இருக்க வேண்டும் என்பதில் இந்தியத் தூதுவர் உறுதியாகவுள்ளதாக அவரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகமொன்றே இவ்வாறு செய்தி வெளியிட் ▷23

# வீதி விபத்துக்களினால் எட்டு மாதங்களில் ஆயிரத்து 418 பேர் பலி

(கொழும்பு)

கடந்த எட்டு மாதங்களில் வீதி விபத்துக்களில் குறைந்தது 1418 பேர் கொல்லப்பட்டதாக சமீபத்திய பொலிஸ் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொரோனா நிலைமை காரணமாக நாடு மூன்று மாதங்களுக்கும் மேலாக பூட்டப்பட்டிருந்தாலும் விபத்துகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எட்டு மாதங்களில் 1358 ஆபத்தான விபத்துக்கள் நடந்ததாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. விபத்துக்கள் காரணமாக பலத்த காயங்களுடன் 4257 பேர் உள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, எட்டு மாதங்களில் நாடு முழுவதும் மொத்தம் 15,402 விபத்துக்கள் நடந்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

# தமிழ்க் கட்சிகளின் இளைஞர் அணியினர் நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள கட்சிகளின் இளைஞர் அணிகளை ஒன்றிணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, நேற்று தமிழ் அரசு கட்சி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, மணிவண்ணன் பிரிவின் இளைஞர் அணிகள் ஒன்றாக கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டில் நேற்று மதியம் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் பின்னணியில் புலம்பெயர் தரப்பொன்றே இந்த முன்முயற்சியை எடுத்துள்ளதாக அறிய முடிகிறது.

மூன்று தரப்பின் இளைஞர் அணியையும் ஒன்றிணைந்து செயற்பட வைப்பதன் முதற்கட்டமாக, தியாகி திலீபனின் நினைவாக முள்ளிவாய்க்காலில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ள நடைபயணத்தில் இந்த தரப்புக்கள் ஓரணியில் செயற்படுவது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக, அனைத்து விடயங்களிலும் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஞா)

## 13ஆவது திருத்...

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் அரசாங்கத்தின் இத்தகைய கருத்துக்கு எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றன.

அதாவது, 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி, 20ஆவது திருத்தம் கொண்டுவரப்படுமாயின் முழு அதிகாரம் ஒருவரின் கீழ் குவிக்கப்படும். இது சர்வதிகார போக்கிற்கு வித்திடுமென எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், இந்தியா 13ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு நிச்சயம் எதிர்ப்பை வெளியிடுமெனவும் சிறுபான்மை கட்சிகள் கூறி இருந்தன. இந்நிலையிலேயே, 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்திய தூதுவரின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என இந்திய தூதரக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பாக இந்தியா கொண்டுள்ள நீண்டகால நிலைப்பாட்டையும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் இந்தியத் தூதுவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார் எனவும் அவர் குறித்த ஆங்கில ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## தலைவர்தான்...

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

உண்மையிலேயே பிரபாகரனை அடிக்கடி சந்தித்த தமிழரல்லாத ஒருவர் நானாக தான் இருக்க வேண்டும். சில வெளிநாட்டவர்கள் பிரபாகரனை சந்தித்தார்கள். அந்த சந்திப்புகள் உலகை பற்றியே ஒரு தவறான நோக்கை கொடுத்திருக்க வேண்டும்.

வெளியுலகை அவர் விளங்கிக்கொள்ளவில்லை. மேலும், பல வெளிநாட்டவர்கள் பிரபாகரனை சந்திக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் அவரும் விட்டுக் கொடுப்பை செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என்பதை அவர் உணர்ந்திருக்கக்கூடும். சமாதான இணக்கத் தீர்வு ஒன்று தேவையானால் இரு தரப்பும் விட்டுக்கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

கேள்வி: பிரபாகரன் என்ற தனி நபரை பற்றி கூறுங்கள்?

பதில்: பிரபாகரன் போரின் இறுதிக் கட்டம் வரை நீண்டகாலம் ஒரு சிறந்த வீராப்புடைய தலைவராக இருந்தார். உலகில் சொந்த விமானப் படையையும் கடற்படையையும் நிறுவிய அரசு அல்லாத தரப்பாக புலிகள் மாத்திரமே இருந்தனர்.

ஆனால், அவரின் அரசியல் விளக்கப்பாடு துரதிர்ஷ்டவசமாக இதைவிட பெருமளவு குறைவானதாகவே இருந்தது. இவருக்கு தென்னிலங்கை, இந்தியா மற்றும் வெளியுலகம் குறித்த இணக்கப்பாடு பெரிதாக இல்லை.

புலம்பெயர்ந்த தமிழர் சமூகத்தில் இருந்த பலர் அவருக்கு தவறான ஆலோசனைகளை வழங்கினார்கள். நெருக்கடிக்கு தீர்வொன்றை காண்பதைக் காட்டிலும் விட்டுக்கொடுக்காத ஒரு தலைவராக இருக்குமாறு அவருக்கு கூறினார்கள்.

சகல வாக்குறுதிகளையும் அவர் காப்பாற்றினார் என்பதை நாம் கூறத்தான் வேண்டும். எங்கெல்லாம் வாக்குறுதி அளித்தாரோ அங்கெல்லாம் இராணுவ நடவடிக்கையை நிறுத்தினார். அவரது படைகள் மீது அவருக்கு முழுமையான கட்டுப்பாடு இருந்தது.

பாலசிங்கம்தான் அவரது பிரதான ஆலோசகரும் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கினார். பாலசிங்கத்தின் அறிவுரைகளை பிரபாகரன் கேட்டு நடக்கும் வரை அநேகமாக சகல விடயங்களுமே சரியான திசையில் சென்றன. ஆனால், பாலசிங்கத்தின் அறிவுரைகளை கேட்காத சந்தர்ப்பங்களில், எல்லாமே பிழையாகிப் போனது.

அவரது தனிப்பட்ட ஆளுமை என்று வரும்போது நல்ல சுவையான சமையல்காரர். நாம் இருவரும் சேர்ந்து நல்ல உணவுகளை சாப்பிட்டிருக்கின்றோம். ஆனால், அவர் மிகவும் ஜாக்கிரதையான பேர்வழி. அவருக்கு நெருக்கமாக போவதென்பது சுலபமானதல்ல.

பாலசிங்கத்தின் அறிவுரைகளை பிரபாகரன் முழுமையாக கேட்டிருந்தால் பல்வேறு விடயங்கள் வித்தியாசமானவையாக இருந்திருக்கும்.

விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தை இழக்கப்போகிறார்கள் என்று பாலசிங்கம் என்னிடம் கூறினார். பாலசிங்கத்தின் முயற்சிகளை பிரபாகரன் ஆட்சேபித்த காரணத்தால் வடக்கையும் கூட இழக்கவேண்டி வந்தது.

பாலசிங்கத்தை பொறுத்தவரை விடுதலைப் புலிகள் புதிய இராணுவ தந்திரோபாயத்துக்கு முயற்சிக்காமல் சமாதான முயற்சிகளை தொடர வேண்டும் என்று பாலசிங்கம் நினைத்தார். பாலசிங்கத்தின் அறிவுரைகளை விடுதலைப் புலிகள் கேட்டு நடந்திருந்தால் இலங்கை தமிழர்களின் நிலை எவ்வளவோ மேம்பட்டதாக இருந்திருக்கும் என்று நிச்சயமாக கூறுவேன். ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் வடக்கில் தமிழர்கள் ஓரளவு சுயாட்சியை அனுபவித்திருப்பார்கள்.

கேள்வி: பிரபாகரனும் சரணடைந்தார் என்பது உங்களுக்கு தெரியுமா?

பதில்: என்னிடம் அது பற்றிய எந்த தகவலும் இல்லை. 2009 மே 18 அவரும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதற்கான அறிகுறிகளே தெரிந்தன. நாம் முன்வைத்த யோசனையினால் அந்த நேரத்தில் பிரச்சினையை தீர்த்திருக்க முடியும் என்று நம்பினேன்.

எமது யோசனையை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா ஆகியன ஆதரித்தன. அது ஒரு வலிமையான யோசனை. நீங்கள் போரில் தோற்றுக் கொண்டு போகிறீர்கள். வெற்றிப் பெறுவதற்கு எந்த வழியும் இல்லை என்று பிரபாகரனிடம் கூறினோம்.

ஒவ்வொரு போராளியும் பதிவு செய்யப்பட்டு கப்பல் மூலம் தெற்கிற்கு அல்லது வெளிநாட்டுக்கு கொண்டு செல்லப்படுவதே எமது யோசனையாகும்.

சரணடைந்த பிறகு எவருமே கொடுமைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என்பதற்கு அமெரிக்காவினதும் இந்தியாவினதும் ஆதரவு கிடைத்தது. அந்த யோசனை பயனளிக்கும் என்று நாம் நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால், அதை 2009 ஏப்ரலில் பிரபாகரன் நிராகரித்து விட்டார்.

ஆனால், விடுதலைப் புலிகளின் எந்த முக்கிய தலைவர்களும் உயிர் தப்பவில்லை. ஆயிரக்கணக்கான பொதுமக்களும் மரணமடைந்தார்கள் என குறிப்பிட்டுள்ளார். (ஞா)


கனேடிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கை நிலையம்
HOTEL MANAGEMENT
திறமையை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச அங்கீகாரம்
- 100% வெளிநாடு செல்லும் வாய்ப்பு
- 6 மாத பயிற்சி முடிவில் அரச அங்கீகார சான்றிதழ்
- 100% வேலை வாய்ப்பு
- 15 நபர்கள் மட்டுமே ஒரு அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்



ஆரம்பம் : 27.09.2020
தொடர்புகளுக்கு :- 076 057 9999
(C-257)






சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம்
ஏகாதச ருத்ர ஹோம வழிபாட்டின் ஆறாம் நாள் கிரியா பூர்வமான சமர்ப்பணம்
திருவாசக முற்றோதலும் அபிஷேக ஆராதனையும்

யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய ஈசான பாகத்தில் வீரமாகாளி தாயாரின் திருவருள் குறிப்பால் உணர்த்தப்பட்டு புதிதாக அமையப்பெற்ற சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானத்தில் உலக நன்மை வேண்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் மஹாளயபட்ஷ மண்டலாபிஷேகத்தில் இன்றைய தினம் உலக நன்மைக்காக இறந்த ஆன்மாக்களை திருப்தி செய்தல் பொருட்டும் பித்ருக்களின் ஆசிகளைப் பெற்று பிதிர்தோசம் நீக்கமற, திருவாசக முற்றோதல் காலை 6.00 மணிமுதல் நடைபெறவுள்ளது. இவ் வழிபாட்டில் அடியவர்கள் கலந்து கொண்டு நமசிவாய உச்சாடணம் செய்து பித்ருக்களை சிவன் ஆசி பெற்று சாந்தியடையச் செய்வோமாக.

குறிப்பு :- திருவாசக முற்றோதல் நடைபெறும் வேளையில் ருத்ரலிங்கேஸ்வர பெருமாளுக்கும் சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாளுக்கும் விசேட அபிசேக பூசை வழிபாடுகள் நடைபெறும்.

(C-258)
ஆலய தர்மபரிபாலன சபையினர்

# 13 ஐ நீக்கும் தீர்மானம் இல்லை; என்கிறார் தாரக பாலசூரிய



(கொழும்பு)

**13 ஆவது திருத்தச்சட்டத்தினை நீக்குவது தொடர்பாக கொள்கைத் தீர்மானங்கள் எதனையும் எமது பாராளுமன்றக்குழு எடுக்கவில்லை என பிராந்திய உறவுகள், நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய சுட்டிக் காட்டினார்.**

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் சுயாதீனத்துவம் கேள்விக்குறியாவதாகவும் இந்தியாவின் அழுத்தங்களுக்கு உட்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கும் ஆளும் தரப்பின் பிரதிநிதிகள் அதனை நீக்க வேண்டும் என்று வலியுறுத்துவது பிராந்திய உறவுகளில் எவ்விதமான தாக்கத்தினை செலுத்தும் என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பாராளுமன்றக் குழுவிலேயே அதிகமான கொள்கைத் தீர்மானங்கள் எடுப்பது வழமையாக இருக்கின்றது. அந்தவகையில் இதுவரையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை நீக்க வேண்டும் என்றே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

மேலும் இந்த விடயத்தில் எமது தரப்பில் சிறுகுழுவினரே அவ்விதமான நிலைப்பாட்டினைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே இது அரசாங்கத்தின் அயல்நாடுகளுடனான உறவுடன் சம்பந்தப்பட்ட விடயமொன்றாகின்றது.

அதேவேளை, சிலருடைய தவறான கணிப்பாக காணப்படுவது என்னவென்றால், மாகாண சபை முறைமையை ஒழிக்கின்றபோது நிதி விரயமாகாது என்பதாகும். உண்மையில் அவ்வாறானதொரு நிலைமை இருக்காது என்பதே யதார்த்தமாகும்.

உதாரணமாக கூறுவதாயின் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை நீக்கி மாகாண முறைமையை ஒழிப்பதன் மூலம் மாகாண அதிகாரத்திற்கு உட்பட்ட பாடசாலைகளையோ வைத்திய நிலையங்களையோ நிரந்தரமாக மூடிவிட முடியாதல்லவா? ஊழியர்களை வெளியேற்றி விடமுடியாதல்லவா?

அதேநேரம், நான் மாகாண சபையின் ஊடாகவே அரசியலில் பிரவேசித்தேன். அத்துடன், மத்திய அரசாங்கமா, மாகாண அரசா என்பதற்கு அப்பால் வினைத்திறனான செயற்பாடுகள் நடைபெறுகின்றதா என்பதிலேயே நாம் அதீத கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தினை எடுத்துக்கொண்டீர்கள் என்றால் மத்திய அரசாங்கத்தினாலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. மாகாண அரசாலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மீளத்திரும்புமளவிற்கு செயற்பாட்டு ரீதியான நிலைமைகள் மோசமாக இருந்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

ஆகவே இங்கு அதிகார கட்டமைப்புக்களை மாற்றுவதை விடவும் வினைத்திறனான செயற்பாட்டு பொறிமுறை தொடர்பிலேயே அதீத கவனம் செலுத்த வேண்டியுள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# நாட்டின் புதிய அரசியலமைப்பில் 12 சரத்துகளைத்தவிர ஏனையவை மாற்றியமைக்கப்படும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பில் 12 சரத்துகளைத் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் புதிய அரசமைப்பின் ஊடாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

புதிய அரசமைப்பை இயற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழு உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.


இதன்படி பௌத்த மதம், தேசிய கீதம், தேசியக் கொடி மற்றும் நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றில் தாக்கம் செலுத்தக்கூடிய 12 சரத்துகளில் எவ்வித மாற்றமும் வராது எனவும், ஏனைய சரத்துகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கோ அல்லது நீக்குவதற்கோ பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் போதும் என்பதால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டிய தேவை ஏற்படாது எனவும் அந்த நிபுணர் குறிப்பிட்டார் என குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை 21 ஆவது திருத்தச் சட்டமாகக் கருதாமல் புதிய அரசமைப்பாகவே அடையாளப்படுத்த முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனினும், சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில் நிபுணர் குழு கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடவுள்ளது. (ஜ-4)

# நாட்டின் நலனுக்காகவே 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது

## சபாநாயகர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடே 20 ஆவது திருத்தச்சட்டமூலம் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

20 ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக ஆளும் தரப்பில் ஒருவிதமாகவும் ஏனைய கட்சிகள் ஒருவிதமாகவும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்ற நிலையில் சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அனைவரது ஒத்துழைப்புடன்தான் நாம் நிறைவேற்ற வேண்டும்.

இதற்கு பாராளுமன்றில் அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகும். இது நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடு. இது ஒரு தரப்பை மட்டும் சார்ந்து இருக்கக்கூடாது.

நாட்டுக்கு நல்லது நடக்கும் என்று எதிர்பார்த்தே அதனைக் கொண்டுவந்தோம். ஆனால், எமது எண்ணம் நிறைவேறியதா? இல்லையா? என்பதில் சந்தேகம் உள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றுவது குறித்து இராஜாங்க அமைச்சர் தகவல்

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற உள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

காலி எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் புதிய அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் 160 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும்.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ள சிறந்த விடயங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உள்ளதாகவும் பாதிப்பான விடயங்களை நீக்கவே 20 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்து இவ்வாரம் முக்கிய அறிவிப்புகள் வரலாம்

(கொழும்பு)

மிலேனியம் சவால் (எம்.சி.சி.) ஒப்பந்தத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக அடுத்த வாரம் அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் கூடவுள்ளது. இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட சில அபிவிருத்திகளுக்காக 480 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்காக அமெரிக்காவினால் இந்த ஒப்பந்தம் தொடர்பான யோசனை இலங்கையில் முன்வைக்கப்பட்டது.

எனினும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்பில் நாட்டில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டமையால் இது வரையில் அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்துடன் இது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. எம்.சி.சி. ஒப்பந்தத்தில் காணப்படும் உள்ளடக்கங்கள் முற்றாக அரசியலமைப்பிற்கு முரணானது என்று அந்த குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதன் காரணமாக அடுத்த வாரமளவில் எம்.சி.சி.தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை வெளிநாட்டுறவுகள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் கலாநிதி ஜயநாத் கொலம்பகே, இந்த ஒப்பந்தம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எம்.சி.சி.ஒப்பந்தம் ஒருபோதும் கையெழுத்திடப்படமாட்டாது என்று வாக்குறுதியளிக்கப்பட்டது. அத்தோடு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, எம்.சி.சி.ஒப்பந்தத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனி அதிகாரத்தால் நீக்க முடியாது என்றும் அதற்காக பொதுஜன பெரமுனவிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 20 ஆவது திருத்தம்

## இலங்கை பிரஜைகள் எவரும் 7 நாட்களுக்குள் நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்த முடியும்

(கொழும்பு)

20 ஆவது திருத்த வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 7 நாட்களுக்குள் இலங்கை பிரஜைகள் எவரும் திருத்தத்தை உயர் நீதிமன்றில் சவாலுக்குட்படுத்த முடியும் என காணி விவகார அமைச்சர். எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறைமை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து வினவிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் இரத்து செய்து நாட்டுக்கு பொருந்தும் வகையிலான அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்படும் என மக்களுக்கு வாக்குறுதியளித்து 20 ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்கப் பெற்றுள்ளது.

ஆகவே 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற எதிர்த் தரப்பினரது ஆதரவு அவசியமில்லை.

20ஆவது திருத்த சட்ட மூல வரைபு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. சட்டமூல வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து 7 நாட்களுக்குள் இலங்கை பிரஜைகள் எவரும் வரைபினை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும். எவ்விதத் தடைகளுமின்றி 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவோம்.

நடைமுறையிலுள்ள விருப்பு வாக்கு முறைமை பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. பொருத்தமற்ற ஒரு தேர்தல் முறைமையாக காணப்படுகிறது.



தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை எதிர்த்தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆகவே புதிய அரசியலமைப்பில் நாட்டுக்கு பொருந்தும் வகையில் தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்படும் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# சிலிண்டர்கள் வெடித்ததில் 217 பேர் படுகாயம்





(டெஹ்ரான்)

ஈரானில் லொறியில் எடுத்துச்செல்லப்பட்ட ஹாஸ் சிலிண்டர்கள் வெடித்த விபத்தில் 217 பேர் படுகாயம் அடைந்த நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஈரானின் மேற்கு பகுதியில் உள்ள இலம் மாகாணத்தில் இருந்து குளோரின் வாயு சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு ஈராக்குக்கு லொறி ஒன்று புறப்பட்டது.

இந்த லொறியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இலம் மாகாணத்தில் உள்ள சஞ்ஜிரா என்ற கிராமத்துக்கு அருகே நின்று கொண்டிருந்த போது கன்டெய்னரில் இருந்த சிலிண்டர்கள் திடீரென வெடித்துச் சிதறின.

அடுத்தடுத்து சிலிண்டர்கள் வெடித்து சிதறியதில் லொறி தீப்பற்றி கொழுந்து விட்டு எரிந்தது. இதனால் அப்பகுதியில் கரும்புகை மண்டலம் உருவானது.

லொறி நிறுத்தப்பட்டிருந்த வீதியில் சென்று கொண்டிருந்த பலர் இந்த விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தனர். மேலும் சிலிண்டர்களில் இருந்து கசிந்த குளோரின் வாயு காற்றில் கலந்தது. இதை சுவாசித்த மக்களுக்கு மூச்சுத்திணறல் உள்ளிட்ட பாதிப்புகளும் ஏற்பட்டன.

தீ விபத்தில் படுகாயம் அடைந்தவர்கள் மற்றும் வாயு கசிவால் சுவாசப் பிரச்சினைக்கு ஆளானவர்கள் என 217 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். லொறிச் சாரதியின் அலட்சியத்தால் அந்த விபத்து நடந்ததாக கூறப்படுகிறது.

எனவே பொலிஸார் லொறி சாரதியைக் கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (4)

# கனடாவில் துப்பாக்கிச்சூடு

## ஐவர் பலி!

(ஒட்டாவா)

கனடாவில் டொரண்டோவில் உள்ள ஒரு வீட்டில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தின் தலைநகர் டொரண்டோவில் உள்ள ஒரு வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை திடீரென துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது.

இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக பொலிஸிற்கு தகவல் கொடுத்தனர்.

விரைந்து வந்த பொலிஸார், துப்பாக்கிச் சூடு நடந்த வீட்டுக்குள் சென்று பார்த்தனர்.

அங்கு ஒரு பெண் உட்பட 5 பேர் பரிதாபமாக உயிரிழந்து காணப்பட்டனர்.

மேலும் ஒரு பெண் படுகாயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நிலையில் பொலிஸார் உடனடியாக அவரை மீட்டு அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் யார்? துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் என்ன? என்பன உள்ளிட்ட தகவல்கள் தெரியவில்லை. இதுபற்றி பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேசமயம் இந்த துப்பாக்கிச்சூடு பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடையது அல்ல என்றும் பொதுமக்களுக்கு எந்த வித அச்சுறுத்தலும் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# மசூதி அருகில் எரிவாயு குழாய் வெடித்ததில் 13பேர் உயிரிழப்பு; 30 பேர் படுகாயம்

(டாக்கா)

பங்களாதேஷில் மசூதிக்கு அருகே எரிவாயு குழாய் வெடித்ததில் 13பேர் உயிரிழந்ததோடு, 30பேர் காயமடைந்துள்ளனர்.

எரிவாயுக் குழாயில் இருந்து கசிவு ஏற்பட்டதாக தீயணைப்பு சேவை அதிகாரிகள் சந்தேகிக்கும் இந்த வெடிப்பு, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு தலைநகர் டாக்காவிற்கு வெளியே நாராயங்கஞ்ச் மாவட்டத்தில் உள்ள மசூதியில் ஏற்பட்டது.

குழாய் கசிந்த பின்னர் மசூதியில் குவிக்கப்பட்ட எரிவாயு குண்டுவெடிப்பைத் தூண்டக் கூடும் என்று தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மூத்த தீயணைப்பு சேவை அதிகாரி அப்துல்லா அல் அரே பின் கூறுகையில், 'ஜன்னல்கள் மூடப்பட்டதிலிருந்து குழாயிலிருந்து எரிவாயு கசிந்து மசூதிக்குள் குவிந்ததாக நாங்கள் முதன்மையாக சந்தேகிக்கின்றோம். காற்று சீராக்கி இயக்கப்பட்ட போது, தீப்பொறிகள் காரணமாக எரிவாயு வெடித்திருக்கக்கூடும்' எனக்கூறினர்.

இந்தச் சம்பவத்தின் போது மசூதியில் உள்ள ஆறு காற்று சீராக்கிகளும் வெடித்தன. வெடிப்பு குறித்து அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

பங்களாதேஷில், கட்டுமான விதிமுறைகளில் பாதுகாப்பு விதிமுறைகள் பெரும்பாலும் மீறப்படுகின்றன. 168 மில்லியன் மக்கள் வாழும் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கானோர் தீ விபத்தில் உயிரிழக்கின்றனர்.

கடந்த ஆண்டு பெப்ரவரியில், டாக்காவில் பழைய கட்டடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 78 பேர் உயிரிழந்தனர். ஒரு மாதத்திற்குப் பின்னர் நகரத்தில் ஒரு அலுவலகக் கட்டடத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 25 பேர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# இராசிபலன்

07.09.2020
ஆவணி 22, திங்கட்கிழமை
பஞ்சமி முன்னிரவு 7.55 மணிவரை
பரணி முழுவதும்
சுபநேரம் 12.04 - 1.34 மணிவரை
இராகுகாலம் 7.34 - 9.04 மணிவரை
சந்திராஷ்டமம்:- சித்திரை
மஹாபரணி

வளவன்


மேஷம்

உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.


ரிஷபம்

குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுபவிரயங்கள் கூடும் நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு.


மிதுனம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கௌரவமான நாள்.


கடகம்

வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், ஆரோக்கியமான நாள்.


சிம்மம்

ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பேச்சில் இனிமை தென்படும், வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.


கன்னி

குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுது செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.


துலாம்

உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும்.


விருச்சிகம்

பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.


தனுசு

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.


மகரம்

பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கும்பம்

முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பிணக்குளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


மீனம்

எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், இறை வழிபாட்டில் நம்பிக்கை கூடும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு, சுப காரியப் பேச்சு நல்ல முடிவுக்கு வரும்.

உன் மௌனம் பேசினால் அதற்குத் தகுந்த மரியாதை கொடு.

# சுகாதார சேவைகளில் மத்தியஸ்தம் வேண்டும்

(கொழும்பு)

மத்தியஸ்தமான ஒரு பகுதியில் சுகாதார சேவைகளை நடத்திச் செல்ல வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மாகாண சபைகளிடம் சுகாதார சேவைகளைக் கையளித்திருந்தால் கொரோனாவின் பிரதிபலன்கள் வேறுவிதமாக அமைந்திருக்கும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பு - களனியில்நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும்,

கொரோனா வைரஸ் பர

## கோட்டா

வலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக இலங்கையில் முன்னெடுப்புக்களை மேற்கொண்ட சகல அரச ஊழியர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராட்டுக்களையும் தெரிவித்தார். (ஐ-4)

# நீரில் மூழ்கி மாணவி பலி

(வாழைச்சேனை)

வாழைச்சேனை ஆலங்குளம் பகுதியில் மாணவியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் வாழைச்சேனை ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த 12 வயதுடைய மாணவியொருவர் தனது சகோதரியுடன் குளத்தில் நீராடச் சென்றவேளை குளத்தில் மூழ்கி உயிரிழந்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-6)

# ஐ.தே.க.தலைமைத்துவத்திற்கு ருவான் விஜேவர்த்தனவே பொருத்தமானவர்

## நியமிக்குமாறு அழுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தலைமைத்துவம் வகிப்பதற்கு பொருத்தமானவர் ருவான் விஜேவர்த்தன ஆவார். எனவே அவரைத் தலைமைத்துவத்திற்கு நியமிக்குமாறு தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேகாலை மாவட்ட அமைப்பாளர் ரகித தயான் விமலரத்ன கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் எவ்வித சிக்கலும் இல்லை. நாம் இளம் தலைவர் ஒருவரையே எதிர்பார்க்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கும் சிறந்த கட்சியாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு ருவான் விஜேவர்த்தனவே பொருத்தமானவர். ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க வேண்டுமாயின் ருவான் விஜேவர்த்தனவைப் போன்று கட்சியை நேசிப்பவர்களை நியமிக்க வேண்டும். கட்சியை பாதுகாப்பதற்கும், தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம்கள் என அனைவரையும் ஒன்றிணைத்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு கட்சியும் இல்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ-4)


## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. தோட்டம் சம்பந்தமாக சகல வேலைகளும் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். குடும்பமாக தங்க வசதி உண்டு. தோட்டத்தில் தனியாக வேலை செய்து பழக்கப்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

ஆரம்பச் சம்பளம்:- 30,000.00

T.P:- +94 77 168 1697, +94 77 113 3667

(C-253)


# மரண அறிவித்தல்

## திரு.ஹரிகிருஷ்ணா தனபாலசிங்கம் (கஜன்)

(Civil Engineering)



மண்ணில்:- 08.11.1990
விண்ணில்:-03.09.2020

கிளிநொச்சி பளை கச்சார்வெளியைப் பிறப்பிடமாகவும் கனடா WHITCHURCH STOUFFVILLE ஐ வதிவிடமாகவும் கொண்ட ஹரிகிருஷ்ணா தனபாலசிங்கம் அவர்கள் 03.09.2020 வியாழக்கிழமை அன்று கனடாவில் அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா-செல்வராணி தம்பதியர், வீரகத்தி-பூரணம் தம்பதியரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் மங்கையற்கரசி தம்பதியரின் கனிஷ்டபுத்திரனும், ஜெயரூபன், சந்திரா தம்பதியரின் அருமை மருமகனும், சபீதா அவர்களின் ஆருயிர் கணவரும், மலர் விழி (மாலதி-பிரான்ஸ்), ஜெயமாலினி (மாலினி-பிரான்ஸ்), ஜெயதீபன் (தீபன்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிரீஷ்கந்தராஜா (சிறி-பிரான்ஸ்), விஜயரூபன் (விஜயன்-பிரான்ஸ்), சதாலட்சுமி (சதா-கனடா), வினோத் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜீதன், ரேணுஜன், ஜிலக்ஷி, சரண், சகீரன், சாரகி (பிரான்ஸ்) ஆகி யோரின் பாசமிகு தாய் மாமனாரும், தட்ஷா, தக்ஷயா (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு Chapel Ridge funeral Home & Cremation Centre, 8911 Wood bine Ave, Markham ONL3R5G1, Canada வைக்கப்பட்டு பின்னர் 09.09.2020 8.30Am - 11.30Am மணியளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மங்கை - 0014377779098 (கனடா),
தீபன் - 0014169036998 (கனடா),
விஜயன் - 0033615145567 (பிரான்ஸ்),
சிறி - 0033651822745 (பிரான்ஸ்)

தகவல்:-
நல்லையா ஜெயவீரசிங்கம்
(தங்கன்-சாவகச்சேரி)
சித்தப்பா (077 693 3255)

(C-3817)

# "அனைவருக்கும் வீடு" செயற்றிட்டத்தின் கீழ் 113 வீட்டுத்திட்டம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

'அனைவருக்கும் வீடு' என்ற செயற்றிட்டத்திற்கு கீழ் யாழ்ப்பாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்புக்கான உதவிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், 113 குடும்பங்களுக்கு, 0.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீடுகளை நிர்மாணிப்பதற்கான முதலாம் கட்ட கொடுப்பனவு பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும், யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது, 113 குடும்பங்களுக்குமான முதலாம் கட்டக் கொடுப்பனவுகளை நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும், யாழ். மாவட்ட அபிவிருத்திகுழு இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் வழங்கினார்.



இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபரும் யாழ்.ஒருங்கிணைப்பு சபையின் செயலாளருமான கணபதிபிள்ளை மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. எஸ். நிக்கொலஸ்பிள்ளை, வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள், அரச அலுவலர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (5)

# பலாலியில் இருவருக்கு கொரோனா உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் பலாலி தனிமைப் படுத்தல் மையத்தைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 18 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 11 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் 135 பேருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் யாழ். போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 8 நாட்களில் மாத்திரம் ஆயிரத்து 47 பேரு க்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார். (5-8)




# தியாகதீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி

(குப்பிழான்)

தியாகதீபம் திலீபனின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்திப் பவனி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரை நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் குழு மேற்கொண்டு வருவதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொக்குவிலிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 5 ஆம் திகதி தியாகி திலீபனின் 33 ஆவது நினைவேந்தல் ஆரம்பமாகி 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடம் போன்றே இம்முறையும் ஊர்திப் பவனி நடைபெறவுள்ளது. அந்தவகையில் 15 ஆம் திகதிக்கும், 26 ஆம் திகதிக்குமிடையில் ஊர்திப் பவனி மக்கள் செறிவாக வாழக்கூடிய பகுதிகள் ஊடாக முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திலீபன் 12 நாட்கள் நீராகாரம் கூட அருந்தாமல் என்ன நோக்கத்திற்காகத் தன் இன்னுயிரைத் தியாகம் செய்தார் என்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஊர்திப் பவனியை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்த செயற்பாட்டிற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பையும் கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5-4-18)

# வடக்கில் கடந்த மாதம் மட்டும் 222 வீதி விபத்துக்கள்

## யாழ்.போதனா பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் மாத்திரம் வட மாகாணத்தில் 222 பேர் வீதி விபத்துக்களால் காயமடைந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பில் மாதாந்தம் வெளியிடப்படும் தரவுக் குறிப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தரவுக் குறிப்பின்படி கடந்த மாதம் தீ விபத்தினால் 5 பேரும் வீதி விபத்தினால் 222 பேரும் ஏனைய விபத்துக்க ளால் 185 பேரும் காயமடைந்துள்ளனர். கடந்த மாதம் மாத்திரம் விபத்துக்களினால் 36 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வாரம் மாத்திரம் 67 பேர் வீதி விபத்துக்களால் காயமடைந்துள்ள அதே வேளை 11 பேர் விபத்துக்களினால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை

## சுகாதார வைத்திய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக் குட்பட்ட மரக்கறிச்சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகளில் பொலித்தீன் பாவனை முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது என மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரப் பணிமனை சுகாதார வைத்திய அதிகாரி த.பால்முரளி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு கால அவகாசம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளது எனவும் அதன் பிற்பாடு பொலித்தீன் பயன்படுத்தப்படின் வியாபார நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலித்தீன் பாவனையை முற்றாகத்தடை செய்யும் தீர்மானம் மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (5-4)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த அம்புலன்ஸ் விபத்துக்குள்ளானது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் நவீன ரக அம்புலன்ஸ் விபத்துக்குள்ளானதில் முன்பக்கம் பலத்த சேத மடைந்துள்ளது. இவ் விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இமையாணன் குஞ்சர் கடை பகுதியில் இடம் பெற்றது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலிருந்து அவசர சிகிச்சைப்பிரிவு நோயாளியொருவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்து விட்டு மீண்டும் பருத்தித்துறை நோக்கிப் பயணித்த போது. வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் வீதியருகிலிருந்த கடை ஒன்று சேதமானது.இதன்போது குறித்த அம்புலன்ஸின் முன்பக்கம் பலத்த சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த வருடம் சுகாதார அமைச்சினால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட நவீனரக அம்புலன்ஸே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது. (5-4-8-60)



# தனிமைப்படுத்தலிலிருந்து 505 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த மேலும் 505 பேர் நேற்று தமது இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் தற்போதுவரை 37 ஆயிரத்து 522 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து தத்தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் அறிவித்துள்ளது. மேலும் முப்படையின் கீழ் இயங்கும் 70 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தற்போது 7 ஆயிரத்து 403 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஆயிரத்து 880 பி.சி.ஆர். பரிசோதனைகளுடன் நாட்டில் இதுவரை 2 இலட்சத்து 37 ஆயிரத்து 610 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-15, அரசடி வீதி , 2ஆம் ஒழுங்கை ஆதன இல. 24 என்ற இலக்கத்தினைக் கொண்ட ஆதனம் வேலன் பெண் சின்னக்குட்டி என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2539 ஆம் இலக்க 30.06.2010 ஆம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் 1971 ஆம் ஆண்டளவில் தனது பெற்றோர் சதாசிவம் தாமோதரம்பிள்ளையாலும் பெண் கனகம்மாவினாலும் தனக்கு சீதனமாகக்கொடுக்கப்பட்டதென்றும் நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இடம் பெயர்ந்து சென்ற பொழுது குறித்த உறுதி தொலைந்து விட்டதென்றும் காணிக்கந்தோரில் தேடுதல் செய்து மீளப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்றும் கடந்த 39 ஆண்டுகளாக தனது சொந்தமும் நிந்தமும் தடையற்றதுமான ஆட்சியிலிருந்து வந்ததென்றும் சின்னத்துரை கைம்பெண் கமலம் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என்று வெளிப்படுத்தியுள்ளார்.

நல்லூர் அரசடி வீதி 3ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்துரை கைம்பெண் கமலமும் அரசடி வீதி 2ஆம் ஒழுங்கை சந்திரா மகாலிங்கம் கொண்டலடி வீதி யோகராணி சின்னத்துரை திருகோணமலை சாம்பல் வீதி 3ஆம் வட்டாரம் தேவராசா பெண் தயாநிதி யாழ்ப்பாணம் அரசடி வீதி 2ஆம் ஒழுங்கை தாமோதரம்பிள்ளை ரசிச்சந்திரன் ஆகியோர் சேர்ந்த யாழ்ப்பாணம் கொண்டலடி வீதி 47 ம் இலக்கத்தைச் சேர்ந்த சின்னத்துரை ராஜ்குமாரும் பெண் சுகந்தினிக்கும் பிரசித்த நொத்தரிசு வி.துரைராஜா முகதாவில் வரையப்பட்ட 10215 இலக்க 13.05.2016 ஆம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தினை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆதனடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்ட யாழ்ப்பாண பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை கிராம அலுவலர் பிரிவு **J/109** யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் பிரதேச செயலகம் கோட்டைக்காடு அல்லது கற்றாளப்பலம் நிலப்பரப்பு 01 குளி 03.77 இது 2010.07.09ம் திகதி நில அளவையாளர் என்.கேதீஸ்வரன் அளந்து வரைந்த 1270 இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டுள்ளது. இதற்கு எல்லை

கிழக்கு-தயான் பெண் பரினாவுக்கும் யோகராஜா பெண் சூரியகலாவிற்கும் உரிய ஆதனங்கள்

வடக்கு:- வேலு சண்முகத்தின் ஆதனம்

மேற்கு:- அரசடி வீதி 2ம் ஒழுங்கை

தெற்கு :- சிறீதரன் பெண் வினோதினியின் ஆதனம்.இதடங்கலும் அமைந்த வீடும் மற்றும் அதற்குச் சேர்ந்தவையும்.

தற்போது சின்னத்துரை ராஜ்குமாரும் பெண் சுகந்தினியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை ராஜ்குமாரும் பெண் சுகந்தினியும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மனுவேல் ஆனல்ட்,
முதல்வர்,
மாநகரசபை.
02.09.2020

(C-244)

# யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## பாரவூர்தி விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

சங்கத்தின் அசோக் லேலண்ட் பாரவூர்தியானது உடற்கோப்புடன் விற்பனை செய்வதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதனை கொள்வனவு செய்ய விரும்புவோர் கூறுவிலையின் இரகசியத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அடையாளமிட்டு தமது கூறுவிலைகளை 18.09.2020 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக தலைவர், யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கேள்வி விண்ணப்பம் கோரல் - பாரவூர்தி விற்பனை" என குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு:**

**❖ பாரவூர்தியினை அலுவலக கடமை நாட்களில் காலை 09.00 - பி.ப 03.30 வரையும் சனிக்கிழமை காலை 09.00- மதியம் 12.30 வரை பார்வையிடலாம்.**

**❖ தங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தினையும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.**

**❖ இயக்குநர் சபையின் முடிவே இறுதியானது.**

**நன்றி.**

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
தலைவர்,
யா/மா/பா/உ/கூ/சங்கம்/இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(C-243)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 39 சூரி,செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11158 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 33 ¼ செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Sc. Demo<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்<br>தொ.இ: G/11198 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா; 25 ½ சூரி,செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. வெதுப்பக நடத்துநர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11161 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 28 ½ செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.Sc Food production technology management. ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உயர் தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/11199 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்தக்கடை நடத்துகின்றார்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11162 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 14 ½, செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. வெளிவாரி மருந்தாளர். மருந்துக் கலவை உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச, தனியார் உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/9014 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 40 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சுயதொழில் விவசாயம்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11164 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 26 ½ செவ் 6 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Diploma in English. Library Information Officer.<br>எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Doctor, Lecturer, Bank staff.<br>தொ.இ: G/9022 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தரம் பிரிக்காத குப்பைகள் வாகனம் மூலம் அகற்றப்படாது

## நகரசபை உறுப்பினர்கள்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் குப்பைகளை தரம் பிரிக்காது வீதிகளில் போட்ட 7 நபர்களுக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி நகர சபையினர் இம்மாதம் முதலாம் திகதி முதல் தரம் பிரித்து வைக்கும் கழிவுகளை மாத்திரமே தமது வாகனங்கள் ஊடாக அகற்றி வருகின்றனர்.

அந்த நடைமுறையைப் பின்பற்றாது சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் தரம் பிரிக்காது வீதியில் குப்பைகளைப் போட்ட 7பேர் மீது பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

தரம் பிரித்து கழிவுகளை அகற்றும் செயற்பாடு 80 சதவீதம் வெற்றியளித்திருப்பதாகவும், பெரும்பாலான பொது மக்கள் அதனை கடைப்பிடித்து வருவதாகவும் நகரசபையின் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது சாவகச்சேரி நகர சபையுடன் வேள்ட் விசன் நிறுவனம் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மூன்று வருடகால செயற்றிட்டத்தில் இணைந்து செயற்பட்டு வருவதனால் எதிர்காலத்தில் சிறப்பாக கழிவு அகற்றல் முகாமைத்துவத்தினை அபிவிருத்தி செய்ய முடியும் என நகரசபை உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (5-4-30)

# இறைச்சிக்காக கடத்தப்பட்ட மாடுகள் பொலிஸாரால் மீட்பு

(நெளுக்குளம்)

வவுனியா நெடுங்கேணியில் இருந்து மதவாச்சி நோக்கி இறைச்சிக்காக கடத்திச் செல்லப்பட்ட 11 மாடுகளை மடுக்கந்த பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த மாடுகள் நெடுங்கேணியிலிருந்து மாமடுப் பகுதியூடாக மதவாச்சி நோக்கி கொண்டு செல்லப்படவிருந்த நிலையில் நேற்று அதி காலை மடுகந்தைப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவற்றை மீட்டுள்ளனர்.

உரிய அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகள் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவித்த பொலிஸார் அவற்றை கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட கப் வாகனத்துடன் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-299)

# நிறுத்தி வைக்கப்பட்ட பாரவூர்தியை மோதிய கார் சேதம்



(முறிகண்டி)

கிளிநொச்சி ஏ-9 வீதியின் கரடிப்போக்கு சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பார ஊர்தி மீது அதே வழியாக வந்த கார் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் காரை செலுத்தி வந்த சாரதிக்கு எந்தவித காயமும் இல்லாமல் அதிர்ஷ்டவசமாக தப்பிக் கொண்டார்.

இவ் விபத்தினால் சுமார் அரை மணிநேரம் வாகன நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து தடைப்பட்டது.

விபத்துக்குள்ளான காரை செலுத்த வந்த சாரதி கிளிநொச்சி பளை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி என தெரியவந்துள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (5-4-100)

# ஹெரோயின் வைத்திருந்த 9பேர் சுற்றிவளைப்பில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் ஹெரோயின் போதைப்பொருள் கைவசம் வைத்திருந்தவர்கள் 9 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை தொடக்கம் நேற்றுக் காலை வரையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 891 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டது.

மேலும் மாவா போதைப் பாக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் சட்ட விரோத மதுபானம் விற்க முயன்ற ஒருவரும் கைது செய்யப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (5-8)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 2 பேர் கைது 190 லீற்றர் கோடா மீட்பு



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியகுளம் தருமபுர பொலிஸார் மற்றும் கிளிநொச்சி சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 176 லீற்றர் கசிப்பும், ஆயிரத்து 190 லீற்றர் கோடாவும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் 7 உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-8-4-316)





நிதி அமைச்சின் கீழ் உள்ள சமூக பாதுகாப்புச் சபையின் வவுனியா மாவட்ட காரியாலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கலும் உத்தியோகத்தர் கௌரவிப்பும் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலாளர் எம். சமன் பந்துலசேன , மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் , வவுனியா மாவட்டச்செயலக திட்டமிடல்பணிப்பாளர் மற்றும் பிரதேச செய லாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: நெளுக்குளம் செய்தியாளர்)



அருட்பணி ம. மரிசுதன் செ.தா. அடிகளாரின் "வலியின் வரிகள்" எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் அருள் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம், அருட்பணி ஏ.பிரான்சிஸ் ஜெயசீலன் மற்றும் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

(படம்:- குருநகர் செய்தியாளர்)

# நீதித்துறை, சட்டவாக்கத்துறையை பலவீனப்படுத்தும் கோட்டா அரசு

## மரிக்கார் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் சட்டவாக்க சபையையும் நீதித்துறையையும் பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குற்றஞ்சாட்டியுள்ளார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

20 ஆவது திருத்தம் ஜனாதிபதியை சர்வாதிகாரியாக மாற்றுவதற்கான ஒரு வழியாகும் என்பதுடன் தேசிய பாதுகாப்பில் ஜனாதிபதியின் பொறுப்புக் கூறலை மட்டுப்படுத்துகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

20 ஆவது திருத்தத்தின் மூலம், சுயாதீன ஆணைக் குழுக்களின் உயரதிகாரிகளையும், அரச உயரதிகாரிகளையும் ஜனாதிபதியே நியமிப்பதன் மூலம், ஆணைக்குழுக்களால் பலனில்லையென்பதை சுட்டிக்காட்டினார்.

பிரதம நீதியரசரை ஜனாதிபதி நியமிப்பதால் நீதித்துறை பலவீனமடையும், அரசியலமைப்பின் எல்லைக்குள் சுதந்திரமாக பேசுவதற்கான உரிமை மீறப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# சு.கட்சியின் 69-வது ஆண்டு நிறைவு விழாவுக்கு சந்திரிகாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 69 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கு, தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 69 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, கடந்த இரண்டாம் திகதி விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த நிலையில் குறித்த நிகழ்வுகளுக்கு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாக சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டிருந்தார்.

எனினும் தனக்கு அவ்வாறு எந்தவித அழைப்பும் விடுக்கப்படவில்லை எனவும், அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது எனவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



அத்துடன் கட்சியின் கடந்த மூன்று சம்மேளனக் கூட்டங்களுக்கும் தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய, கட்சியினரை முட்டாளாக்கும் நோக்கில் முன்வைக்கப்படும் இவ்வாறான கருத்துக்களை ஆராய்வது சுதந்திரக் கட்சியினரின் கடமையாகும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# கஞ்சா தோட்டம் சுற்றிவளைப்பு

## மூவர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமாக கஞ்சா பயிரிடப்பட்டிருந்த தோட்டங்கள் மூன்று உடவலவ விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் சுற்றி வளைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொஸ்லந்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பலஹருவ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இவ்வாறு கஞ்சா தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டதுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலஹருவ, கிரிதிவெல மற்றும் ராஜாங்கனய பகுதிகளைச் சேர்ந்த 33, 41 மற்றும் 45 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ)

# 900 மெகாவோல்ட் மின்சாரம் இன்று முதல் வழங்கப்படும்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு விநியோகிக்கப்படும் முழுத் திறனைக் கொண்ட 900 மெகாவோல்ட் மின்சாரத்தினை இன்று முதல் வழங்க முடியுமென மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட திடீர் மின்சாரத் தடையின் பின்னர் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மின் பிறப்பாக்கிகள் வழமைக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் அதில் ஒரு பிறப்பாக்கியிலிருந்து 100 மெகா வோல்ட் மின்சாரம் குறைவாகவே பெறப்பட்டு வந்த நிலையில் குறித்த மின் பிறப்பாக்கியின் நிலைமை சீராக்கப்பட்டதற்கமைய இன்று முதல் 900 மெகா வோல்ட் தேசிய மின் கட்டமைப்பிற்கு விநியோகிக்க முடியுமென மின்சக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-6)

# தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கான அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த அனைத்து வேட்பாளர்களும் தங்களது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குறித்த விபரங்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த காலம் இன்றுடன் நிறைவடைகின்றது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் திருத்தச் சட்டத்திற்கமைய, இவ்வாறு விபரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் வேட்புமனு தாக்கல் செய்து மூன்று மாதங்களுக்குள் தங்களது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குறித்த விபரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.


இதற்கமைய, தேர்தலில் தோல்வியடைந்த அனைத்து வேட்பாளர்களும் தங்களது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் குறித்த விபரங்களை சமர்ப்பிப்பதற்கு காலம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த காலஎல்லை இன்றுடன் நிறைவடைவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஜ-6)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

11


கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**XV.** அதிகாரங்களை அளிப்பது தொடர்பான பொறுப்பு

உள்ளூராட்சி மன்றம் இணைந்த கட்டளைச் சட்டங்கள் மற்றும் வேறு ஏதேனும் எழுத்து மூலச் சட்டத்தின் கீழ் தம்மிடம் வழங்கப்பட்டுள்ள அல்லது விதிக்கப்பட்டுள்ள அல்லது கையளிக் கப்பட்டுள்ள அதிகாரங்கள், அலுவல்கள் அல்லது பணிகளுக்கிடையே ஏதே னுமொரு நகர முதல்வர்-தலைவரால் பிரதி நகர முதல்வருக்கு- உப தலைவ ருக்கு அல்லது சபையின் ஏதேனுமொரு உத்தியோகத்தருக்கு எழுத்துமூல ஆணை யொன்றின் மூலம் கையளிக்கப்பட லாம்.


**XVI.** சபை நிதியை செலவழித்தல் தொடர்பிலான பொறுப்பு

(i). எழுத்துச் சட்டத்தில் காட்டப்படும் எல்லைகளின் கீழ், சபை நிதியிலிருந்து செலவு செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தல், நிறுவனத்தின் கணக் கீட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில் நகர முதல்வர்-தலைவ ருக்கிருக்கும் சட்டப் பொறுப்பாகும். சபை நிதியை செலவு செய்வதுடன் ஏற்பு டைய சட்ட ஏற்பாடுகள் அட்டவணை-1இல் காட்டப்பட்டுள்ளன.

| சட்டக் குறிப்புகள் | பணத்தை செலவு செய்யக் கூடிய விடயங்கள் |
|---|---|
| • மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188(1) உப வாசகம் | - 24 விடயங்கள் |
| • நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 159(1) உப வாசகம் | - 14 விடயங்கள் |
| • 1987 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 132ம் வாசகம் | - 17 விடயங்கள் |

*அட்டவணை - 1*

மேயர்/தலைவர்–பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்படல்




### பிரதேச சபைத் தலைவரின் பொறுப்பு

• பி.ச 8(2)- பிரதேச சபைத் தலை வர் தேவைக்கேற்ப உபதலைவருக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ அதிகா ரங்களை ஒப்படைத்தல்.

• பி.ச 8(3)- ஒப்படைக்கப்பட்ட அதி காரங்கள் பிரதேச சபைத் தலைவரால் மாற்றப்படல் அல்லது இல்லாமல் செய் தல்.

• பி.ச 10- பிரதேச சபைத் தலைவர் சபையின் அனைத்து கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல்.

• பி.ச 11- பிரதேச சபைத் தலைவர் விசேட சபை கூட்டங்களை கூட்டுதல்.

• பி.ச 14(2) - பிரதேச சபைத் தலை வர் உறுப்பினர் வாக்கிற்கு மேலதிகமாக தீர்மானிக்கும் வாக்கினை பிரயோகித் தல்.

• ஏற்பாடு 2(1)(அ) - பிரதேச சபைத் தலைவர் சபையின் மூலம் முடிவு களினை பெற்றுக்கொள்ளுதல்.

• ஏற்பாடு 2 (1)(ஆ) - பிரதேச சபைத் தலைவர் அந்த முடிவுகளினை நடை முறைப்படுத்துதல்

• பி.ச 15- பிரதேச சபைத் தலைவர் ஏற்றுக் கொள்ளப்பட்ட சபையின் அறிக் கையில் கையொப்பமிடல் மற்றும் சான் றளிக்கப்பட்ட பிரதிகளினை (நீதிமன்ற விவகாரங்களுக்கான சாட்சியாக) உறுதி செய்து கொள்ளல்.

• ஏற்பாடு 2(1)(ஈ)- பிரதேச சபைத் தலைவர் சபையின் செயலாளர் உட்பட ஊழியர் குழாமிற்கு எழுத்து வடிவில் கடமைகளினை ஒப்படைத்தலும் அந்த கடமைகள் சரிவர ஆற்றப்படுகின்றனவா? என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள லும்.

• ஏற்பாடு 5(1) - பிரதேச சபைத் தலைவர் நிதி கட்டுப்பாடு உண்டு என்பதனை உறுதிப்படுத்தலும் பொறு ப்பு கூறுதலும்.

• ஏற்பாடு 99 - பிரதேச சபைத் தலைவர் கொடுப்பனவு பற்றுச் சீட்டுக் களுக்கு சான்றளித்தல்.

• ஏற்பாடு 5(2)- பிரதேச சபைத் தலைவர் நிதி விவகாரங்கள், செயற் பாடுகள் வகைப்படுத்தலுக்கேற்ப திட்ட மிடப்பட்டுள்ளது என்பதனையும் நிதி கட்டளைகள் நிதியியல் நிர்வாக கட்ட ளைகளுக்கு இணங்க மேற்கொள்ளப் படுகின்றன என்பதனையும் உறுதிப் படுத்தல்.

• ஏற்பாடு 5(3)- பிரதேச சபைத் தலைவர் செலவு மற்றும் வருமானம் தொடர்பாக போதுமான உள்வாரியான சோதனை ஒன்று இடம்பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்துதல்.

• ஏற்பாடு 5(4) - பிரதேச சபைத் தலைவர் தகவல்கள் புதுப்பிக்கப்படு கின்றன என்ற விடயத்திற்கு சான்ற ளிக்கக் கூடிய முகாமைத்துவம் ஒன் றினை காரியாலயத்தில் முன்னெடுத்துச் செல்லுதல்.

• ஏற்பாடு 5(5)- பிரதேச சபைத் தலைவர் அபிவிருத்தி திட்டம் மற்றும் வரவு-செலவு திட்டம் என்பவற்றிற்கேற்ப விடயங்களினை செயற்படுத்துதல்.

• ஏற்பாடு 5(6) - பிரதேச சபைத் தலைவர் வருமானங்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சேகரிக்கப்படுகின்றன என்பதனையும் அவை கணக்கில் சேர்க் கப்படுகின்றன என்பதனையும் உறுதிப் படுத்துதல்.

• பிரதேச சபைத் தலைவர் நிதி மற்றும் களஞ்சிய கொடுக்கல்-வாங் கலினை சரியாக முன்னெடுத்துச் செல் லுதலும் உள்வாரியான கணக்காய் வினை உறுதிப்படுத்துதலும். (ஏற்பாடு 5(7))

• பிரதேச சபைத் தலைவர் சபை யின் நிதி மற்றும் நிலையான சொத் துக்களின் பாதுகாப்பிற்கு சான்றளித்தல். (ஏற்பாடு 5(8)).

• பிரதேச சபைத் தலைவர் செயற் றிட்டங்களுக்கு ஏற்ப வருமானம் மற்றும் செலவு அறிக்கையினை மாதாந்தம் சபைக்கு முன்வைத்தல். (ஏற்பாடு 5(9)).

• பிரதேச சபைத் தலைவர், வங்கி வெளியீடுகளை ஒழுங்குபடுத்துவ தனை சான்றளித்தல் (ஏற்பாடு 5(10)).

• பிரதேச சபைத் தலைவர் வீதி, நிதி மற்றும் சொத்துக்கள் தொடர்பாக காப்புறுதி காப்பீடொன்றினை பெற்றுக் கொள்ளுதல். (ஏற்பாடு 5(11)).

• பிரதேச சபைத் தலைவர் நிதி மற்றும் சொத்துக்களுக்கு பொறுப்பான அலுவலக குழாமில் அதிகாரிகளிட மிருந்து சொத்தின் பாதுகாப்புக்கு பிணை யினை பெற்றுக் கொள்ளல். (ஏற்பாடு 5(12). பி.ச சட்டம் 184).

• பிரதேச சபைத் தலைவர் வரு டாந்த அபிவிருத்தி திட்டத்தினை முன் வைத்தல். (ஏற்பாடு 5(13)).

• பிரதேச சபைத் தலைவர் வரு டாந்த கணக்கியல் வெளியீட்டினை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன் குறித்த நிறுவனத்திற்கு முன்வைத்தல். (ஏற் பாடு 193).

• பிரதேச சபைத் தலைவர் நிதி மற்றும் களஞ்சியம், நிலையான சொத் துக்கள் தொடர்பாகவும் ஆய்வு அமைத்து சொத்து தொடர்பான சான்றினை பெற்றுக் கொள்ளுதல். (ஏற்பாடு 203 மற்றும் 218).

• பிரதேச சபைத் தலைவுர் சட்டத் தின் விவகாரங்களுக்கு ஏற்ப சோதனை செய்வதற்காக செயலாளர் உட்பட அதி காரிகளுக்கு அதிகாரத்தினை அளித் தல். (பி.ச சட்டம் 8(2)).

• பிரதேச சபைத் தலைவர் பொது விடயங்களுக்காக காணி அளவிடுதலும் விசாரணை செய்தலும் (ஏற்பாடு 20(1)).

• பிரதேச சபைத் தலைவர் வீதி சாலைகளுக்கு தடையாக இருக்கும் மரங்களை வெட்டுதல். (பி.ச சட்டம் 43).

• பிரதேச சபைத் தலைவர் வேலி, எல்லை தொடர்பான பிரச்சினைகளில் தலையிடுதல். (பி.ச சட்டம் 44).

• பிரதேச சபைத் தலைவர் குழி களை பாதி திறந்து வைக்காமல் இருப் பதற்கு தேவையான நடவடிக்கை எடுத் தலும் சரியான முறையில் குழாய்க ளைப் பொருத்துதலும். (ஏற்பாடு 45).

• பிரதேச சபைத் தலைவர் சொத்து சேதங்கள் தொடர்பான வேண்டுகோள் களினை கவனத்தில் கொள்ளுதலும் நட்டஈடு வழங்கலும். (பி.ச சட்டம் 73).

• பிரதேச சபைத் தலைவர் சுற் றாடல் பாதுகாப்பிற்கு தடையாக இருக்கும் (தனியார் காணிகளில்) நீர் தேங்கி நிற்கும் இடங்கள் தொடர்பாக நடவ டிக்கை எடுத்தல். (பி.ச சட்டம் 101).

• பிரதேச சபைத் தலைவர் சத்தம் நிறைந்த இடங்களுக்கு அனுமதிப்பத் திரம் வெளியிடுதல் மற்றும் அவற்றை இரத்து செய்தல். (பி.ச சட்டம் 102 (1)).

• பிரதேச சபைத் தலைவர் சட்ட ரீதியற்ற சத்தம் நிறைந்த இடங்கள் தொடர்பாக அபராதம் அறவிடல். (பி.ச சட்டம் 102 (2)).

• பிரதேச சபைத் தலைவர் ஆபத் திற்குரிய மரங்கள், கிளைகள், மரக்கட் டைகள், காய்கள் என்பவற்றினை அகற்று வதற்கு உத்தரவிடல். (பி.ச சட்டம் 107).

• பிரதேச சபைத் . தலைவர் அனு மதிப்பத்திரம் இன்றி தொழிற்சாலையோ, வியாபாரமோ முன்னெடுக்கப்படும் சந்தர் ப்பத்தில் நீதவானிடம் நிறுத்தும் கட் டளை ஒன்றினை வேண்டி நிற்றல். (பி.ச சட்டம் 167 (1)).

• பிரதேச சபைத் தலைவர் அடுத்த வருடத்திற்கான வரவு-செலவு ஆவ ணத்தினை சபைக்கு முன்வைத்து அதனை அங்கீகரித்துக் கொள்ளல். (பி.ச சட்டம் 168 (1)).


(தொடரும்...)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022

## ஒன்பதில் வருகிறது ராகு... உயர்நிலை வரும் வாழ்வினிலே!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



கன்னி ராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் இருந்து வந்த ராகு பகவான், செப்டெம்பர் முதலாம் திகதி முதல் 9ஆம் இடத்தில் இருக்கிறார். கேது பகவான் அதே நாளில் உங்கள் இராசிக்கு 4ஆம் இடமான சுகஸ்தானத்தில் இருந்து வெற்றிகள் ஸ்தானமான 3ஆம் இடத்தில் இருக்கிறார்.

இதற்கிடையில் நவம்பர் 15ஆம் திகதி மகர இராசிக்கு குரு மாறுகின்றார். அப்பொழுது அவரது பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது. அதுமட்டுமல்லாமல் 9, 11 ஆகிய இடங்களிலும் பதிவாகின்றது. டிசெம்பர் 26 ஆம் திகதி மகர இராசிக்குச் சனி பெயர்ச்சியாகிச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்திற்கு செல்லும் சனி, பூர்வ புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு கிடைக்க வேண்டிய பலனை வழங்குவார். 2021ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி குரு, கும்ப இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். அப்பொழுது அவர் உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகின்றார். இவற்றை எல்லாம் அடிப்படையாக வைத்து ராகு, கேதுக்களின் பெயர்ச்சி பலன்களை பார்ப்போம்.

### ஒளிமயமான வாழ்வு தரும் ராகு



### முன்னேற்றம் தரும் கேது

'9இல் ராகு வந்தால் பொன், பொருள் சேர்க்கை ஏற்படும்' என்பார்கள். ஒன்பதாமிடம் என்பது தகப்பனாரைப் பற்றியும், தந்தை வழி சொத்துக்கள், தர்மம் செய்யும் யோகம், ஆலயத் திருப்பணி, பங்காளிகள், கடல் கடந்த வாய்ப்பு போன்றவற்றையும் குறிக்கும் இடமாகும். பொதுவாக தந்தைவழி அனுகூலம் உண்டு. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு உண்டு. புதுவாகனம் வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு கிடைக்கும்.

மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கப்போகிறீர்கள். உடன் பிறப்புகள் உங்களுக்கு உதவியாக இருப்பர். கொடுக்கல்-வாங்கல்களில் ஒருசில சமயங்களில் ஏமாற்றம் ஏற்பட்டாலும் மற்றொரு சமயத்தில் இரு மடங்கு லாபம் கிடைக்கும். கேது வலிமையான கிரகம் என்பதால் அதற்குரிய விநாயகப் பெருமான் வழிபாட்டை முறையாக செய்வது நல்லது. மேலும் சித்ர குப்தன் வழிபாடும் சிறப்பான பலன்களை உங்களுக்கு வழங்கும்.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 04.01.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, உடன்பிறப்புகளின் வழியே பகை உருவாகலாம். உயர் இரத்த அழுத்தம் மற்றும் மூட்டுவலி போன்றவற்றால் தொல்லைகள் ஏற்படலாம். கடன் சுமை குறைந்தாலும் மீண்டும் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். இடம், பூமிவிற்பனை மூலம் எதிர்பார்த்த தொகை கிடைக்கும். உத்தியோகத்தில் திடீர் மாறுதல்கள் உருவாகும். அதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடலாம்.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (05.01.2021 முதல் 12.09.2021 வரை)

சந்திரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த நற்பலன்கள் ஏற்படும். லாப ஸ்தானாதிபதியாக சந்திரன் விளங்குவதால் சேமிப்பு அதிகரிக்கும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவீர்கள். பணியிலிருந்து நீக்கப்பெற்றவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்புகள் உண்டு. வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் வந்து சேரும். வாகன யோகம் முதல் அனைத்து யோகங்களும் வந்து சேரும். குழந்தைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். உடல்நலக் குறைபாடுகள் அடிக்கடி வரலாம்.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.09.2021 முதல் 20.03.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, விரயம் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். வாழ்க்கைத்துணை ஓர் இடத்திலும், தான் ஒரு இடத்திலும் இருந்து வேலை பார்க்கும் சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகும். பணப்புழக்கம் நன்றாக இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். இடமாற்றங்கள் இனிமை தரும் விதத்தில் அமையும். பழைய ஆபரணங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய ஆபரணங்களை வாங்கி மகிழும் வாய்ப்பு சிலருக்கு கிடைக்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு எதிர்பார்த்த பொறுப்புகள் கிடைக்கலாம்.

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

வெற்றிகள் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் 'நிழல் கிரகம்' என்று வர்ணிக்கப்பட்டாலும், நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னிற்பவர் ஆவர். எனவே பாதசார அடிப்படையில் பலன்களை அறிந்து கொண்டு செயற்படுவது நல்லது. பகை கிரகத்தின் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது அதற்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் வைத்துக் கொண்டால் நற்பலன்கள் கிடைக்கும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 09.05.2021 வரை)

கேட்டை நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். வருமானப் பற்றாக்குறை அகலும். வசதிமிக்க செல்வந்தர்களின் ஒத்துழைப்பால் புதிய முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கு மீண்டும் பணியில் சேர அழைப்புகள் வரலாம். உறவினர்களிடையே நிலவிய மனச்சங்கடங்கள் அகலும். அசையா சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம் உண்டு.




எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள். கொடுத்த கடன்களும் வசூலாகும்.

### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.05.2021 முதல் 16.01.2022 வரை)

உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவரது சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். அவர்களின் உயர் கல்வி, படிப்பிற்கேற்ற வேலை சம்பந்தமாக நீங்கள் ஏதேனும் முயற்சி செய்தால் அதில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். 'பூர்வீக சொத்துக்களில் இதுவரை பாகப்பிரிவினை ஏற்படவில்லையே' என்ற கவலை அகலும். இக்காலத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பாகவே இருக்கும்.



### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.01.2022 முதல் 20.03.2022 வரை)

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. தாய் ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானத்திற்கு அதிபதியானவர். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உற்றார், உறவினர்கள் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். கற்ற கல்விக்கு ஏற்ற வேலை கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகள் வரலாம். 'வாங்கிய இடத்தை விற்று விட்டோமே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது புதிதாக இடம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் சம்பள உயர்வு பற்றிய சந்தோஷமான செய்தி வந்து சேரும். வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

பெயர்ச்சியாகும் ராகுவால் ஒளிமயமான எதிர்காலம் அமையவும், கேதுவால் முன்னேற்றம் பெறவும், ஏகாதசி தோறும் விரதமிருந்து விஷ்ணுவை வழிபட்டு வரவும். புதன்கிழமை தோறும் பூஜை அறையில் கண்ணன் படம் வைத்து மாலைசூட்டியும், விளக்கேற்றியும் கண்ணன் கவசம் பாடி வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக கற்ற கல்விக்கு ஏற்ற வேலை கிடைக்கும். பெற்றோர்களின் ஆதரவும், மற்றவர்களின் ஆதரவும் உங்களுக்கு வந்து சேரும். கடன் சுமை குறையும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சம்பள உயர்வுடன் கூடிய வேலை கிடைக்கலாம். உங்கள் கனவுகள் நனவாக விநாயகப் பெருமானையும், மகாலட்சுமியையும் இல்லத்துப் பூஜையறையில் பதிகம் பாடி வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# பாரதம்

# தனது தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றவுள்ள செர்பியா

## நன்றி தெரிவித்த இஸ்ரேல் பிரதமர்

(ஜெருசலேம்)

செர்பியா தனது தூதரகத்தை டெல் அவிவிலிருந்து ஜெருசலேமுக்கு மாற்றவுள்ளது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

இது அமெரிக்காவை பின்பற்றும் முதல் ஐரோப்பிய நாடாக திகழ்வதாகவும் சுட்டிக்காட்டினார். அடுத்த ஆண்டு ஜூலை மாதத்திற்குள் இந்த இடமாற்றம் முன்னெடுக்கப்படும் என்றும் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிப்பதற்கும், செர்பியாவின் தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றுவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டமைக்காகவும் செர்பிய ஜனாதிபதிக்கு நன்றியையும் அவர் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேல்-பாலஸ்தீனிய சமாதான ஒப்பந்தத்தில் அதன் நிலை தீர்க்கப்படும் வரை சர்ச்சைக்குரிய நகரமான ஜெருசலேம் குறித்து நாடுகள் நடுநிலை வகித்ததால் இஸ்ரேலில் பெரும்பாலான இராஜதந்திர பணிகள் டெல் அவிவில் உள்ளன.

எனினும் டிசெம்பர் 2017 இல், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்து, அமெரிக்க தூதரகத்தை டெல் அவிவிலிருந்து மாற்றுவதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2-4)

# எச்சரிக்கையை ஏற்காத அமெரிக்கா ஒப்பந்தத்திலிருந்து வெளியேறிய ஈரான்

(டெஹ்ரான்)

சர்வதேச அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து ஈரான் முழுமையாக வெளியேறியுள்ளதாக அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஈரான், சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியன கையெழுத்திட்ட சர்வதேச ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்காகடந்த வருடம் விலகி ஈரான் மீது பொருளாதாரத் தடையை விதித்தது. எனினும் பொருளாதாரத்தடையை நீக்காவிட்டால் அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகப் போவதாக ஈரான் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ஜ-4-10)

# நிறவெ...


# வலுச்...



(வோஷிங்டன்)

பொலிஸ் காவலி... உயிரிழந்த சம்பவ... நடைபெற்ற பேரணி...

# திடீரென தீப்பற்றி எரிந்த தேர்



(ஆந்திரா)

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கோவில் தேர் தீப்பற்றி எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டம் அந்தர் வேதியில் ஸ்ரீலட்சுமி நரசிம்மர் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு சொந்தமான தேர், கோவில் வளாகத்தில் உள்ள கூடாரத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் நள்ளிரவு குறித்த தேர் திடீரென தீப்பிழ்த்து எரிந்தது. இதனால் அங்கு திடீர் பரபரப்பு ஏற்பட்டது. இதுபற்றி தகவல் அறிந்த தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து தீயை அணைத்தனர். எனினும் தேர் முழுவதும் எரிந்து சாம்பலானது. (ஜ-4)

# ரஷ்யாவின் கொரோ... நோய் எதிர்ப்பு சக்தி...

## ❖ஆய்வில் உறுதி





## ❖ஜனவரியில் மக்களுக்கு...

(மொஸ்கோ)

ரஷ்யாவில் கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்குமென ஆய்வில் தெரியவந்துள்ளது.

கொரோனாவால் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றான ரஷ்யா, உலகின் முதல் கொரோனா தடுப்பூசியை அறிமுகம் செய்து பரிசோதனைகள் வெற்றிகரமாக முடிந்த நிலையில், பொதுமக்கள் பயன்பாட்டுக்காக தயாராகி, பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசிக்கு ஸ்புட்னிக்-5 என்று பெயரும் இடப்பட்டுள்ளது.

முதலில் மருத்துவ ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இந்த தடுப்பூசி போடப்படவுள்ளதோடு அதைத் தொடர்ந்து பல கட்டங்களாக பொதுமக்களுக்கு போடப்படவுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலா... பூசியை பயன்படுத்த... வருகிறது.


இந்நிலையில், ... துள்ள கொரோனா த... பாதுகாப்பானது என... விளைவுகளையும் ஏ... முதல் இரண்டு கட்ட... தெரிய வந்துள்ளது.

மருத்துவ இதழ்...

# வெறிக்கு எதிராக

# ...க்கும் போராட்டங்கள்




...ன்)

**...காவலில் கறுப்பினத்தைச் சேர்ந்த டேனியல் புரூடி ... சம்பவத்திற்கு நீதி கேட்டு அமெரிக்காவில் ... பேரணியின் போது கலவரம் ஏற்பட்டது.**

அமெரிக்காவில் கடந்த மார்ச் மாதம் பொலிஸ் காவலில் கறுப்பினத்தை சேர்ந்த டேனியல் புரூடி உயிரிழந்த சம்பவத்திற்கு நீதிகேட்டு அமெரிக்காவின் ரோசெஸ்டரில் கடந்த வெள்ளிக்கிழமை பேரணி நடைபெற்றது.

அமைதியாக சென்ற பேரணி, நீதிமன்ற வீதியில் சென்றபோது, அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

சட்டவிரோதமாக கூடுவதை தவிர்த்துவிட்டு அனைவரும் கலைந்து செல்ல வேண்டும் என பொலிஸார் அறிவிப்பு வெளியிட்டனர். ஆனால் போராட்டக்காரர்கள் கலைந்து செல்லவில்லை. இதனையடுத்து பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசத் தொடங்கினர். இதனையடுத்து அங்கு கலவரம் வெடித்தது. (ஜ-4)

# ...ரானா தடுப்பூசி ...டியை அளிக்கும்



# ...க்கு பரிசோதனை

...ம் முதலாம் திகதி இந்த தடுப் ...யன்படுத்த ரஷ்யா ஆயத்த மாகி...

...லையில், ரஷ்யா கண்டுபிடித் ...ரோனா தடுப்பூசி ஸ்புட்னிக்-5 ...ானது என்றும் எந்தவித பக்க ...ளையும் ஏற்படுத்தாது எனவும் ...ண்டு கட்ட ஆய்வின் முடிவில் ...ந்துள்ளது.

...துவ இதழான தி லான்செட் தெரிவித்துள்ளது. ஆய்வில் பங்கேற்ற 76 பேருக்கும் கொரோனாவுக்கு எதிரான ஆன்டி பாடிகள் உருவானதாகவும் தெரிவித்துள்ளது.

இந்த மருந்தின் மூலம் உருவான நோய் எதிர்ப்பு சக்தியானது கொரோனாவில் இருந்து இயற்கையாகவே மீண்ட பிறகு மக்கள் கொண்டிருந்த நோயெதிர்ப்பு சக்தியை ஒத்திருந்தது என்றும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2-4)

# பேருந்து கோரவிபத்து ஏழுபேர் பரிதாபமாக பலி!



(ஒடிசா)

தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்து லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, ஒடிசாவிலிருந்து தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு சென்ற பேருந்து, நேற்று முன்தினம் அதிகாலை சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூர் அருகே சென்றபோது லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேருந்தின் ஒரு பகுதி முழுவதும் சிதைந்துபோனது. பேருந்தில் இருந்தவர்களில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 7 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஜ-4)

# அமெரிக்காவுக்கான தூதுவராக
# ரவிநாத் ஆரியசிங்க

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான தூதுவராக ரவிநாத் ஆரியசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பிரான்ஸ் நாட்டுக்கான தூதுவராக நியமிக்க ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் அமெரிக்காவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக கடமையாற்றிய ரொட்னி பெரேனாண்டோ நாட்டிற்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.



இதேவேளை நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்து வரும் பிரான்ஸ் நாட்டுக்கான இலங்கை தூதுவராக பேராசிரியர் க்ஷனிகா ஹிரிம்புரேகம நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தவிர இத்தாலி, தென்கொரியா, சீசெல்ஸ், ஈரான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கான தூதுவர் பதவிகள் வெற்றிடமாக இருந்து வருகின்றன. அந்தப் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். (ஐ-4)

# அம்பாறைக் கடற்கரையில் எண்ணெய் படிமங்கள்
## மீனவர்கள் அச்சம்


(அம்பாறை)

எண்ணெய் கப்பல் தீ விபத்தினால் கடலில் எண்ணெய் கசிவு ஏற்படாது என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு, கல்முனை உள்ளிட்ட பகுதிகளில் எண்ணெய் பரவல் அடையாளங்கள் தென்பட்டுள்ளன.

இந்த எண்ணெய் பரவலானது விபத்திற்குள்ளான கப்பலின் எண்ணெய் கசிவா அல்லது வேறு படகில் இருந்து வெளியாகிய எண்ணெய் கசிவா என அறிய முடியவில்லை.

அத்துடன் குறித்த விபத்து தொடர்பாக முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மாநகர சபைகளுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்திருந்தது.





இதேவேளை கரையோர மீனவர்களும் மீன்பிடிப்பதற்காகக் கடலுக்கு செல்லவில்லை. இந்த எண்ணெய் படிமங்கள் கடற்கரையோரங்களில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள், தாவரங்களில் தென்படுவதைக் காண முடிந்துள்ளது. (ஐ-4)

# பொலிஸ் நிலையத்தில் தீ

(மிரிஹான)

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட தீ பொலிஸாரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பழைமையான கட்டடத்தொகுதியில் உள்ள குறித்த பொலிஸ் நிலையத்தின் மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், பொலிஸ் நிலையத்துக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன், அதனை மீளத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

# ஆணின் சடலம் மீட்பு



(பதுளை)

பதுளை தெமோதரை சௌதம் தோட்டம் மேற்பிரிவில் அமைந்துள்ள குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை தெமோதரை சௌதம் தோட்டம் மேற்பிரிவில் அமைந்துள்ள குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் குளத்தில் மிதப்பதை கண்டு பிரதேச மக்களால் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து மீட்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# கந்தகாடு முகாமில்
## ஒரு கைதிக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் மூன்று பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று முன்தினம் இரவு தெரிவித்துள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்த கைதி ஒருவருக்கும் மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்த இருவருக்கும் இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 121 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அரசன்

அந்தக் காலத்திலே ஒருத்தன் கடல் வாணிபம் செய்வதற்காகப் போகின்றான். கப்பல் உடைந்து கடலிலே மூழ்கிப்போகிறது. அவனும் போய்விடுகின்றான். அவனுக்கு ஏகப்பட்ட சொத்து இருக்கின்றது. வாரிசு இல்லை.

முறைப்படி வாரிசு இல்லாத சொத்து அரசாங்கத்திற்குச் சேர வேண்டியது தானே. அதனாலே அந்த ராஜாங்கத்திலே இருந்த நிதி அமைச்சர் ராஜாவுக்கு ஒரு குறிப்பு அனுப்புகின்றார்.

கடல்வாணிபம்செய்யப் போன ஒருத்தன் கப்பல் உடைந்து இறந்து போனதனாலேயும்– அவனுக்குச் சந்ததி இல்லை என்பதற்காகவும் அவனுடைய சொத்துப் பூராகவும் அரசாங்க கஜானாவை சேர்ந்து விடுகின்றது என்கின்ற குறிப்பை அனுப்பி வைத்தார் ராஜாவிற்கு.

அந்த ராஜா பார்த்தார் யோசித்தார். அவ்வளவு செல்வத்தையும் உடனே அரசாங்கம் எடுத்துக்கலாம் என்ற முடிவுக்கு வரவில்லை, அவசரப்படவில்லை. நிதானமாக சிந்தனை செய்தார்.

அந்த நபர் ஒரு பெரிய வியாபாரி என்றால் பல திருமணம் செய்து கொண்டிருப்பானே... அப்படி இருந்தால் அவனுடைய மனைவிமார்களிலே யாராவது கர்ப்பமாக இருக்கின்றார்களா? என்று விசாரிக்க வேண்டும் என்றார்.

அரசாங்க அதிகாரிகள் விசாரித்தார்கள். ராஜா எதிர்பார்த்த போலவே செத்துப் போன அந்த வியாபாரியின் ஒரு சம்சாரம் கர்ப்பமாக இருப்பது தெரிய வந்தது. உடனே ராஜா சொன்னார். அந்த வியாபாரியின் சொத்து அரசாங்க கஜானாவிற்கு வரவேண்டியதில்லை.

அந்த செல்வம் முழுவதும் கர்ப்பத்திலே இருக்கின்ற அந்த குழந்தையைத் தான் சேரும் என்றார். இப்படி தீர்ப்புக் கொடுத்த ராஜா யார் தெரியுமா? துஷ்யந்தன், ஆமா காளிதாசன் உடைய சாகுந்தலத்திலே வருகின்ற ஒரு காட்சி தான் இது.

காளிதாசனுடைய ரகுவம்சம் வரிசையாக சூரிய வம்ச ராஜாக்களைப் பற்றி சொல்லுகின்ற காவியம். அதிலே வருகின்ற ரகு என்கின்ற ஒரு ராஜா ஒரு காரியம் செய்தார். அந்த ராஜா உள்நாடுகள், வெளிநாடுகளை எல்லாம் ஜெயித்து ஏகப்பட்ட செல்வங்களோடு திரும்புகின்றார்.

அந்த சொத்துப் பூராகவும் என்ன செய்தார் தெரியுமா? 'விச்வஜித்' என்கின்ற ஒரு யாகம் செய்து அத்தனை செல்வத்தையும் தானம் செய்து விடுகின்றார். தட்சணையாக வேறு கொடுக்கின்றார்.

ஏற்கனவே இருந்த சொத்துக்களைக் கூட தானம் செய்து விடுகின்றார். அந்தக் காலத்திலே ஒருத்தர் ராஜா ஆகவேண்டும் என்றால் அதற்கு முன்னரே அதற்கான யோக்கியத்தை சம்பாதிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. குருகுல வாசகம் செய்ய வேண்டும்.

சாத்திரங்களை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். தர்மத்திலேயும் பண்பிலேயும் அவர்கள் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ராஜாவாக ஆகி வெளி விரோதிகளை ஜெயிப்பதற்கு முன்னாடி காமம்– குரோதம் இது மாதிரியான ஆறு உள் விரோதிகளை ஜெயிக்க வேண்டும் என்கின்றது சாஸ்திரம்.

ஒரு ராஜா மக்களிடம் வரி வசூலிக்கின்றது எப்படி என்பதனைக் கூட அப்போ சொல்லியிருக்கின்றார்கள். ஒரு வண்டானது எப்படி புஷ்பத்திற்கு வலி தெரியாமல் தேனை எடுத்துக் கொள்கின்றதோ அதே மாதிரித்தான். ராஜா குடிமக்களுக்குக் கொஞ்சங்கூட சிரமம் தெரியாமல் அவர்களுடைய மலர்ச்சி குன்றாமல் வரி வசூலித்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது சாஸ்திரம்.

இதையே இன்னொரு உவமையாலே அழகாகச் சொல்கின்றான் காளிதாசன். சூரியன் எப்படி பூமியிலேயிருந்து நீரை உறிஞ்சிக்கொண்டு பிறகு அதையே மழையாகப் பொழிகின்றதோ அது மாதிரி அந்த ராஜா (திலீபன்) குடிமக்களிடம் இருந்து வரி வசூல் செய்வதை பிறகு நலனுக்கே செலவிட்டான் என்கின்றான். நம்முடைய காலத்திலே பிரஜைகளிலே ஒருத்தன். மிகவும் சிரமப்பட்டு கடன் வாங்கி ஒரு கார் வாங்கினான். "என்னங்க இது ஆச்சரியமாக இருக்கின்றது. ஏற்கனவே நீங்கள் கடன் கட்ட முடியாமல் கஷ்டப்படுகின்றீர்கள். இந்த நிலைமையிலே இது வேறு தேவையா?" என்று கேட்டார்கள். இதற்கு அவர் சொன்னார்.

"அப்படி இல்லை, என்னிடம் மற்றவர்கள் வரி வசூல் செய்கின்ற போது என்னாலே வேகமாக ஓட முடியவில்லை. அதனாலே தான் கார் வாங்கினேன்" என்றார்.

# ஆசிரிய ஆலோசகர் சேவைக்குள் 20 பாடங்கள் உள்ளீர்ப்பு



(கொழும்பு)

கல்வி அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ஆசிரிய ஆலோசகர் சேவையினுள் மொத்தமாக 20 பாடங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.


புதிய கல்விச்சீர்திருத்தத்தை கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரீஸ் முன்வைக்கவுள்ள இந்நிலையில் சீர்திருத்தை அடிப்படையாகக்கொண்டு பாடங்கள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக முதன்மைப்பாடங்களும் தொகுதிப் பாடங்களும் அத்துடன் தொழில்நுட்பப் பாடங்களும் இதில் அடங்குகின்றன.

ஆசிரிய ஆலோசகர் சேவை பிரமாணக்குறிப்பில் ஆசிரிய ஆலோசகர் பதவிக்குரிய நியமனப் பாடங்கள் காணப்படாவிட்டால் தற்போது மேற்பார்வை செய்யும் பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் சேவைப் பிரமாணக்குறிப்புச் செயலுறுப்பெறும் தினத்திலிருந்து 5 வருட காலத்துக்குள் முதலாவது வினைத்திறன்காண் மற்றும் இணைப்பு மொழி சித்தி அடைவதும் அவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# சுற்றிவளைப்பில் 358 பேர் கைது



(கொழும்பு)

மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 358 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 105 பேர் ஹெரோயின் போதைப்பொருளுடன் தொடர்புடையவர்கள் எனவும் மேலும் 102 பேர் கஞ்சா போதைப் பொருளுடன் தொடர்புடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏனைய 8 பேர் ஐஸ் போதைப்பொருளைத் தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# செய்தித்துளிகள்

## கனடாவில் கோர விபத்து ஈழத்தமிழர் இருவர் பலி

(ஒட்டாவா)

கனடாவில் ஏற்பட்ட வீதி விபத்தில் இரண்டு தமிழர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஒண்டாரியோவின் **Blue Mountains** நகரில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

**Oshawa** மற்றும் **Whitchurch-Stouffville** நகரங்களைச் சேர்ந்த 29 வயதான இரண்டு தமிழர்களே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)


## ஆறு பேர் கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாகச் சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட 500 கிலோகிராம் பீடி சுற்றும் இலைகளுடன் 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலாபம் - மாரவில கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினரால் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறிய படகொன்றிற்குள் 16 பொலித்தீன் பக்கெட்டுக்களில் குறித்த பீடி சுற்றும் இலைகள் பொதியிடப்பட்டிருந்த நிலையில் குறித்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ஜ-6)

## மஞ்சள் கைப்பற்றல்



(கொழும்பு)

கடற்படையால் நேற்றைய தினம் கற்பிட்டியில் ரூ.3 மில்லியன் பெறுமதியான மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து கடல் வழியாக கற்பிட்டிக்கு கொண்டு வரப்பட்ட 800 கிலோகிராம் மஞ்சள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பாக 3 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-6)

# ஆன்மீகம்



## சாபங்களையே வரங்களாக்குவோம்!

(நேற்றைய தொடர்ச்சி)

தேர் உருண்டு சாய்ந்து விடாமல் அச்சமயம் கைகேயி தன் விரலை கொடுத்துக் காத்தாள். அதற்காகவே தசரதர் மகிழ்ந்து அவளுக்கு இரு வரங்களை அளித்தார். ஆனால், அவள் பெற்ற வரத்தால்தான் ராமரின் பட்டாபிஷேகமே நின்றது.

ராமர் கானகம் சென்றார். தசரதர் வானகம் சென்றார். பெற்ற வரங்களைத் தீராத பழி சேர்த்த தீய சாபங்களாக அல்லவா மாற்றிக் கொண்டு விட்டாள் அந்த மகாராணி. அது ஒரு புறம் இருக்கட்டும். பெண்களின் மென்மை விரல்கள் போல விளங்குவதாலேயே வெண்டைக்காய்க்கு 'லேடீஸ் ஃபிங்கர்' என்று பெயரிட்டார்கள் ஆங்கிலேயர்கள்.

அப்படியிருக்க கைகேயி தன் மென் விரலை எப்படி அச்சாணிக்குப் பதிலாக வைக்க முடியும் என்ற கேள்வி எழுந்தால் அதற்கும் நம் புராணம் பொருத்தமாகப் பதில் சொல்கிறது. ஒரு நாள் அயோத்தி நகரின் வீதியில் மாலை நேரம் தசரதனின் மூன்று மனைவியரும் சிரித்து, களித்துப் பேசிக் கொண்டு உல்லாசமாக உலா சென்றனர்.

அச்சமயம் எதிரே ஒரு தவசீலர் வந்து கொண்டிருந்தார். முனிவரைப் பார்த்த அடுத்த விநாடியே கௌசல்யாவும், சுபத்திரையும் இரு கரம் குவித்து வணங்கினர்.

கைகேயியோ பேச்சு சுவாரஸ்யத்தில் லயித்தபடி தவசீலரை நோக்கி ஒரு கையை மட்டும் சற்று அலட்சியமாக உயர்த்தியபடி செல்ல முனிவருக்குக் கோபம் பிறந்தது. கோபத்தின் பிள்ளை சாபம்தானே? 'அலட்சியம் செய்த கை இரும்பைப் போல உணர்வற்றுப் போகட்டும்' என்று சபித்தார்.

இரும்பாகிப் போன கைவிரலைத் தான் அச்சாணிக்கு ஈடாக வைத்துக் கணவனைக் காப்பாற்றினாள் கைகேயி. சாபத்தையே தன் சாமர்த்தியத்தால் வரமாக்கிக் கொண்டவளும், வரத்தையே தன் பேராசையால் சாபமாக்கிக் கொண்டவளும் ஒரே கைகேயிதான்.

ஏற்படும் சம்பவங்களை எதிர்கொள்ளும் விதத்தால் தான் வரங்களோ, சாபங்களோ அமைகின்றன. ஒரு விவசாயின் வயலில் வேதாளம் ஒன்று இருந்தது. உழுது பயிரிட்டு ஏற்ற வகையில் நீர் பாய்ச்சினான் அவன். கதிர் விளைந்து முற்றியது. ஆவலோடு அறுவடை செய்ய கழனிக்கு வந்த அவன் முன் வேதாளம் காட்சி அளித்தது.

'நான் குடியிருக்கும் இடத்திலா கதிர் அறுக்கிறாய்?' என்று கோபத்துடன் கேட்டதோடு, 'கட்டு ஒன்றுக்கு ஒரு படி நெல்தான் கிடைக்கும்' என்று சபிக்கவும் செய்தது. கவலை பெருக கண்ணீர் சிந்திய விவசாயி என்ன செய்வது என்று சிந்தித்தான். அவனுக்கு ஒரு அற்புதமான யோசனை தோன்றியது.

அனைத்து நெற்கதிர்களையும் அறுவடை செய்து களத்து மேட்டில் குவித்தான். இரண்டு இரண்டு நெற்கதிர்களாக எடுத்துக் கட்டினான். பொதுவாக அறுவடைக் காலத்தில் ஐம்பது, அறுபது கதிர்களைத்தான் ஒரு கட்டாக அமைப்பான். இப்போது கட்டுகள் பல ஆனது.

ஒரு கட்டுக்கு ஒரு படி நெல்தான் தேறும் என்ற வேதாளத்தின் சாபத்தையே தேவதையின் திருவார்த்தையாக மாற்றிவிட்டான் அந்த விவசாயி! திருப்பங்கள் பல கொண்டதுதான் மனித வாழ்க்கை. திருப்பங்களை விருப்பங்களாக ஆக்கிக் கொள்வதில்தான் அமைகின்றன வரங்களும் சாபங்களும்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 140 | 200 |
| தக்காளி | 120 | 150 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 |
| கோவா | 140 | 150 | 140 | 160 |
| கரட் | 140 | 160 | 160 | 160 |
| பூசணி | 100 | 110 | 120 | 120 |
| புடோல் | 60 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 130 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 100 | 140 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 200 | 250 | 240 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 90 | 120 |
| கறிமிளகாய் | 350 | 280 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 300 | 250 |
| போஞ்சி | 350 | 30 | 250 | 280 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | — | 50 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60-70 | 80 |
| இராசவள்ளி | — | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 240 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 70 | — | — | 80 |



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

60

கலாநிதி முருகர் குணசிங்கம்

மேலும் பலர் தமிழ்நாட்டிலேயே தொடர்ந்து தங்கி வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் மருத்துவம், விஞ்ஞானம், கணனித் துறைகளில் பயின்றவர்கள் இந்தியாவிலேயே தொழில் பெற்று வாழக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன.

ஏனைய துறைகளில் கல்வி கற்றவர்களுக்குத் தமிழ்நாட்டிலோ இந்தியாவின் பிற மாநிலங்களிலோ தொழில் பெறுகின்ற வாய்ப்புக்கள் குறைவு. அவர்களுள் பலர் வாழ்க்கையை நகர்த்தும் பொருட்டு கிடைக்கும் எந்த வேலையையும் செய்கிறார்கள்.

ஆனால் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஈழத்தமிழர்களுக்கு ஆங்கில மொழியில் கற்கின்ற வாய்ப்பும் விஞ்ஞானத் தொழில்சார் கல்விகளைக் கற்பதற்கும் கிடைத்த வாய்ப்பு தற்பொழுது சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் அவர்களுக்கு இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் கிடைத்து இருக்கின்றது.

அத்தோடு அதிக வருமானம் தரக்கூடிய திரைப்படததுறையிலும் சிலர் கால் பதித்தனர். குறிப்பாக மட்டக்களப்பைச் சேர்ந்த பாலு மகேந்திரா சிறந்த இயக்குநராக வலம் வந்து அண்மையில் காலமானார்.

ஆயினும் இந்தியாவில் அல்லது தமிழ்நாட்டில் அனைத்து வேலைகளையும் அவர்களால் செய்ய இயலாது.

அகதி முகாம்களில் உள்ளவர்களுள் சிலர் மிகக் குறைவான சம்பளத்திற்குத் தனியார் நிறுவனங்களில் வேலை செய்கின்றனர்.

ஆயிரக்கணக்கானவர்கள் எதுவித வேலைகளும் இன்றித் தவிப்பதையும் காண முடிகிறது. குறைந்த சம்பளத்திற்குச் சாதாரணக் கூலி வேலைகள் செய்து அதில் கிடைக்கும் வருமானத்தில் தமது மேலதிக குடும்பச் செலவுகளையும் பிள்ளைகளின் பாடசாலைச் செலவுகளையும் சமாளித்து வருகின்றனர்.

அத்துடன் அரச கொடுப்பனவுகள் மிகவும் குறைவாக இருப்பதாலேயே அவர்கள் தொழிலுக்குச் செல்வதாகக் கூறுகின்றனர்.

அகதி முகாம்களுக்கு வெளியில் குறிப்பாக சென்னை, திருச்சி போன்ற நகரங்களில் சிலர் சிறு வணிக முயற்சிகளில் ஈடுபட்டு உள்ளனர்.

அதிலும் அவர்கள் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்து வருகின்றனர். சிலர் வெளிநாட்டில் உள்ள உறவினர்கள் வாங்கிய வீடுகளை வாடகைக்கு விட்டு அதில் சிறு வருமானம் பெறுகின்றனர்.

சிலர் வாகனம், கார், ஆட்டோ முதலிய வாகனங்களை வாங்கி வாடகைக்கு ஓட்டுகின்றனர். சிலர் சிறு சில்லறை வணிகத்தில் ஈடுபட்டு உள்ளனர்.


சிலர் வெளிநாடுகளில் உள்ள ஆண், பெண்களுக்குத் திருமணம் பேசி முடிக்கும் தரகர் வேலை பார்த்தும் வருமானம் பெறுகின்றனர்.

சிலர் சாஸ்திரம், சாதகம் பார்த்தல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர். நடுத்தர, மேல் தட்டு வர்க்கத்தினர் மிகவும் வசதியாகவும் ஆடம்பரமாகவும் சொந்தவீடு, வாகனம் முதலியவற்றோடு வாழ்கின்றனர்.

மேற்கண்ட நிலைமைகளை உற்று நோக்கம்போது மனித ஏற்றத்தாழிவுகளும் அவலங்களும் தமிழ்நாட்டில் வாழும் ஈழத்தமிழர்களைப் பல்வேறு வழிவகைகளில் பாதிப்புக்கு உள்ளாக்கி வருவதைக் காண முடிகிறது.

ஈழத்தமிழர் அரசியல் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரர் தீர்வு ஏற்படும் வரை மேற்படி அவலங்கள் தொடர்வதை யாராலும் தடுக்க முடியாது.

அடுத்து அவுஸ்திரேலியாவில் உள்ள கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார நிலைமைகள் பற்றி ஆராய்ந்து அதனை ஏனைய ஆங்கிலமொழி பேசுகின்ற நாடுகளிலுள்ள நிலைமைகளை அறிந்து கொள்வதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடியதாக அமையும்.




1973 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா தொழிற்கட்சி அரசாங்கம் ஏற்கனவே நடைமுறையில் இருந்த "வெள்ளை அவுஸ்திரேலியா (White Australia) கொள்கையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அதன் விளைவாக இலங்கையில் இருந்து படித்த தொழில்சார் வல்லுநர்கள் சிறிய அளவில் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர்.

ஆனால் பேராசிரியர் எலியேசர் மலேசியப் பல்கலைக்கழகத்தில் இருந்து விடுபட்டு 1968 இல் அவுஸ்திரேலியாவில் உள்ள லாறோப் பல்கலைக்கழகத்தில் (La Trope University) பேராசிரியராகப் பதவி ஏற்றார்.

இவரே இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியா சென்ற முதல் தமிழர் ஆவார். 1973 ஐத் தொடர்ந்து பல தமிழர்கள் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்தும் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்தனர்.

அவர்களில் முக்கியமான ஈழத்தமிழரான பேராசிரியர் சி. அரசரட்ணம் என்பவர் மலேசியாப் பல்கலைக்கழகத்தில் இருந்து விடுபட்டு 1973 இல் அவுஸ்திரேலியாவில் உள்ள நியூ இங்கிலாந்து (New England) பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

மேற்படி இரு பேராசிரியர்களும் தலைசிறந்த கல்விமான்களாக உலகை வலம் வந்து கல்விசார் பங்களிப்பைச் செய்தவர்கள் ஆவர்.

பல ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டு கல்வித் துறைக்குப் பாரிய பங்களிப்புச் செய்து உள்ளனர்.

இருவருமே ஒய்வுபெறும் வரை பல்கலைக்கழகங்களில் தொழில் புரிந்தனர். அவுஸ்திரேலியாவிலேயே தமது வாழ்க்கையையும் முடித்துக் கொண்டனர்.

1983 இல் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் பின்னர் பல தலைசிறந்த கல்விமான்கள், ஆய்வாளர்கள், நாடக ஆசிரியர்கள், நாவல், சிறுகதை எழுத்தாளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், கணனித்துறை விற்பன்னர்கள், சங்கீத, நாட்டியக் கலைஞர்கள், அறிஞர்கள், சிறந்த ஒலிபரப்பாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் அவுஸ்திரேலியாவுக்கு அகதிகளாகப் புலம்பெயர்ந்து சென்று வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் அவுஸ்திரேலியப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்பதன் பொருட்டு மாணவர் விசாவில் (Student visa) வந்தவர்களும் 1983 இல் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரம் காரணமாக அங்கு மீண்டும் செல்ல முடியாமல் அகதி அந்தஸ்து கோரி நிரந்தரமாகத் தங்கி உள்ளனர்.

1980களின் பின்னர் பல்வேறு புலமைசார் தொழில் வல்லுநர்கள் தொழில் அடிப்படையில் (Skilled Migration) அவுஸ்திரேலியாவுக்கு வருவதையும் அத்தோடு பல்வேறு தரப்பட்டவர்கள் அகதிகளாக வந்து அவுஸ்திரேலியா அரசு மற்றும் தனியார் துறைகளில் தொழில் புரிவதையும் புள்ளிவிபரங்கள் மூலம் அறிய முடிகிறது.

அவ்வாறானவர்கள் பல்வேறு தரப்பட்டவர்களாகக் காணப்படுவதால் அவர்களின் கல்வித் தராதரங்களைப்பற்றியும் தொழில் அடிப்படையில் அவர்களின் எண்ணிக்கையையும் சுருக்கமாகக் குறிப்பிடுவதன்மூலம் ஈழத்தமிழர்களின் பங்களிப்பு அவுஸ்திரேலியா நாட்டில் எந்த அளவிற்கு இடம்பெற்று உள்ளது என்பதனையும் எவ்வளவு படித்த அறிவாளிகள் ஈழத்தில் இருந்து அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர் என்பதனையும் அறிய முடியும்.

'ஏற்கனவே பிறிதோர் இடத்தில் குறிப்பிட்டது போல் அவுஸ்திரேலியாவில் சுமார் இருபதினாயிரத்திற்கும் இருபத்தைந்தாயிரத்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களுள் சுமார் 5000 பேர் வரையிலும் பட்டப்பின்படிப்புப் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

பட்டப் படிப்பு படித்தவர்கள் சுமார் 7000 பேர், டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் சுமார் 2500 பேர், சேட்டிபிகேட் துறைகளில் (Certificate Courses) பயிற்றப்பட்டுப் பட்டம் பெற்றவர்களாக 1500 பேர் வரையிலும் காணப்படுகின்றனர்.

இவைதவிர புள்ளி விபர இலாகாவில் பதிவு செய்யப்படாமலும் பலர் இருக்கக்கூடும்.

சுருங்கக்கூறின் சுமார் இருபது முதல் இருபத்தையாயிரத்திற்கும் இடைப்பட்ட ஈழத்தமிழர்களுள் சுமார் பதினாறாயிரம் பேர் படித்தவர்களாகக் காணப்படுவது வியப்பிற்கு உரியது.

மேற்கண்டவர்களைத் தொழில் அடிப்படையில் நோக்குவ்தும் தேவையாகிறது.

நடுத்தர உயர் நிர்வாகப் பதவிகள் வகிப்பவர்கள் சுமார் 1500 பேர், தொழில்சார் வல்லுநர்களாகச் சுமார் 6000 பேர், தொழில்நுட்ப வல்லுநர்களாகச் சுமார் 1200 பேர், லிகிதர்களாகச் சுமார் 3000 பேர்களும் பதிவாகி உள்ளனர்.

இவைதவிர சமூக சேவைகள், விற்பனைத்துறை, வாகன ஓட்டிகள், உற்பத்திசாலைகளில் தொழில் புரிவோர்களென சுமார் 1000 பேர் பதிவாகி உள்ளனர். இத்தொகை 2006 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பெறப்பட்டன.

மேலும் பதிவு செய்யப்படாமல் இருப்பவர்களும் 2006 ஆம் ஆண்டுக்குப் பின் அவுஸ்திரேலியாவுக்கு வந்தவர்களையும் சேர்த்துக் கணக்கிடும் பொழுது இத்தொகை கூடுதலாகவே காணப்படும்.

2006 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் ஈழத்தமிழர்களின் இளம் தலைமுறையினர் பல ஆயிரக் கணக்கில் பல்கலைக்கழகம் சென்று படித்துப் பட்டம் பெற்று இருக்கக் கூடும்.

(தொடரும்)

# வெற்றி பெறப்போவது யாருடைய இராஜதந்திரம்?



இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் "இந்தியா தான் எல்லாமே" என்ற நிலைமையே நீடித்துக்கொண்டிருக்கின்றது. இந்தியாவைத் தாண்டி அணுவும் அசையாது என்ற பிம்பமும் இன்னமும் இருந்து கொண்டு தான் இருக்கிறது. இந்தியாவின் இந்தப் பாத்திரத்திற்கு தற்போது இலங்கையின் ஆட்சியாளர்களால் பலத்த சவாலொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வளிப்பதற்காக இந்திய,இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தினை நீக்க வேண்டும் என்ற புதிய ஆட்சியாளர்களின் கோசங்கள் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகின்றன.

இந்தக் கோசங்கள் நடைமுறையில் செயல்வடிவம் பெறுகின்றபோது, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா கொண்டிருக்கும் "பிம்பம்" நிச்சயம் உடைந்துவிடும். அவ்வாறான நிலைமை இந்தியாவுக்கு ஆசியப்பிராந்தியத்தில் காணப்படும் "ஆதிக்கத்தை" மலினப்படுத்துவதோடு, இராஜதந்திர ரீதியிலும் "முதன்மைத்தான பாத்திரலிருந்து" அகல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தும்.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கான முதற்படியாக, தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் தரப்பாக இற்றைக்கு 33 ஆண்டுகளுக்கு முன்னதாக 1987ஆம் ஆண்டு இந்திய, இலங்கையுடன் ஒப்பந்தம் செய்தது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழர்களின் பூர்வீக நிலமாக வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டது. இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் செய்யப்பட்டு மாகாண முறைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் 13ஆவது திருத்தம் ஏட்டில் உள்ளபடி நாட்டில் இன்னமும் நடைமுறையாகவில்லை.

வரலாறு அப்படியிருக்க, பொதுத்தேர்தலுக்கு பின்னர் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிப்பீடமேறியவர்களுக்குள்ளிருந்து இந்திய, இலங்கை ஒப்பந்த எதிர்ப்புவாதம் வெளிக்கிளம்பியுள்ளது.

குறிப்பாக, விடயத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத்வீரசேகரவே, மாகாண சபை முறைமையை நீக்க வேண்டும் என்பதில் "உடும்புபிடியாக" இருந்து வருகின்றார். இவருடைய "உடும்புபிடி" நிச்சயமாக அவருடைய சுய சிந்தனை கொள்கையில் ஏற்பட்டதொன்று அல்ல.

13 ஆவது திருத்தத்திற்கு ஏற்பட்டுள்ள இத்தகைய நிலைமைகளால் அன்று மாகாண சபை முறைமையை விரும்பாத தமிழ்த் தரப்புக்களும், முஸ்லிம் தரப்புக்களும் இன்று மாகாண சபை முறைமையை பாதுகாத்து தக்கவைப்பதற்காக பெரும்பாடு பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்று தமிழ் பேசும் தரப்புக்கள் கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு படையெடுத்துள்ளன.

அதனை விடவும், தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பல தரப்பினரும், இந்தியாவுக்கு "அழுத்தங்களை" பிரயோகிக்கும் வகையில் ஊடக அறிக்கைகளையும், ஊடகவியலாளர் சந்திப்புக்களையும் நடத்தி வருகின்றார்கள். இவ்வாறான வழிமுறைகள் ஊடாக இந்தியாவுக்கு அழுத்தங்களை அளிக்க முடியும் என்பது தமிழ் பேசும் தரப்பின் இராஜதந்திரமாக உள்ளது.

இலங்கை அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில், உடனடியாக அரசியலமைப்பில் 20 ஆவது திருத்தச்சட்டத்தினையே மேற்கொள்ளவுள்ளது. அதன்பின்னரே, புதிய அரசியலமைப்பு செயற்பாடுகளில் தீவிரம் காட்டவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் மாகாண சபைகளை வெள்ளை யானைகளாகவும், அவை, அரசியல் நாகரீகமற்ற தரப்புக்கள் அரசியலில் பிரவேசிப்பதற்கு வழிவகுக்கின்றது என்றும், மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவே முடியாது என்பதால் அந்த அதிகாரங்களையாவது பிடுங்கிவிட வேண்டும் என்றும், செலவீனங்களை கட்டுப்படுத்துவதற்காக 13 ஆவது திருத்தத்தினை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என்றும் உறுதியான நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றார்.

இவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது அவற்றுக்கு செயல்வடிவமளிக்கவே பிரயத்தனம் செய்வார். அவரது பிரயத்தனம் தமிழ் பேசும் தரப்பினைப் பொறுத்தவரையில் . நேர் மறையான பிரதிபலிப்பாகவே இருக்கப்போகின்றது.

அதுமட்டுமன்றி, தற்போதே இந்திய, இலங்கை ஒப்பந்தத்தினையும், 13 ஆவது திருத்தத்தினையும் எதிர்க்கும் ஆளும் தரப்புக்குள்ளிருந்தான கோசங்கள் ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்ப்பதாகவே அமையப்போகின்றது.

ஆனால் தற்போதைய ஆட்சியாளர்களால் எடுத்த எடுப்பிலேயே இந்தியாவின் "பிடி"யை தளர்த்திவிட முடியுமா என்றொரு கேள்வி தொடர்ச்சியாக இருக்கின்றது. ராஜபக்ஷவினரின் கடந்த ஆட்சியில் இந்தியாவை "கைவிட்ட" போக்கால் ஈற்றில் ஆட்சியே கைவிட்டுப்போன அனுபவம் அவர்களுக்கு நிறைவே உள்ளது.

அந்தவகையில் 13 ஆம் திருத்தத்தினை முழுமையாக அகற்றும் வகையில் ராஜபக்ஷவினர் நடந்துகொள்ள மாட்டார்கள் என்று நம்ப முடியும்.

ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை தற்போதுள்ளபடி நிச்சயமாக வைத்திருக்கப்



போவதில்லை. அதற்காக, தமது தரப்புக்குள்ளிருந்து 13 இற்கு எதிரான கோசங்களை அதிகரிக்கச் செய்து 13 ஆவது திருத்தத்தில் காணப்படுகின்ற "அற்பசொற்ப" அதிகார விடயங்களையும் பிடுங்கி எறிவதற்கு முயற்சிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

உள்நாட்டில் ராஜபக்ஷ தரப்பு, 13 ஆவது திருத்தம் சம்பந்தமாக தமக்கு வேண்டிய விடயங்களை சாதிக்க காய்களை நகர்த்தினாலும் இந்திய, இலங்கை ஒப்பந்ததின் பங்குதாரர்களாக இருக்கும் இந்தியத் தரப்பினரை "முறையாக" அணுகுவதற்கும் "சிக்கல்கள்" எழுகின்றபோது அவற்றிலிருந்து மீள்வதற்கும் உரிய வழிமுறைகளை கையாள்வதற்கென சரியான நபர் தேவையாகவுள்ளார்.

அதற்கான தெரிவாகத் தான், முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவை இந்தியாவுக்கான தூதுவராக புதுடில்லிக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது அரசாங்கம்.

உயர்பதவிகளை தெரிவு செய்யும் துறைசார் குழுவிற்கு மிலிந்த மொறகொடவின் பெயர் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் வெகுவிரைவில் சாதகமாக அறிவிப்புக்கள் கிடைக்கவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

மேலும் புதுடில்லிக்கு வழமையாக செல்லும் தூதுவர்களை போலல்லாது, இம்முறை தெரிவாகும் தூதுவரை அமைச்சரவை அமைச்சருக்குரிய உரிய அதிகாரங்களுடன் அனுப்பி வைப்பதற்கே அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இந்த தீர்மானம் பற்றி தான் உறுதியாக அறிந்திருக்கவில்லை என்றுரைக்கும் பிராந்திய உறவுகள் நடவடிக்கைகள் இராஜங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, அயல்நாடு என்ற வகையில் இந்தியவின் தூதுவராக நியமிக்கப்படுபவர் இந்திய ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட உயர் மட்டத்தரப்பினரை அனுகவல்வராக இருக்க வேண்டும் என்பதில் அதிக கரிசனை கொண்டிருப்பதாக கூறுகின்றார்.

மேலும், நியமிக்கப்படவுள்ள இந்தியாவுக்கான தூதுவருக்கு அமைச்சரவை அமைச்சருக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படுவது தொடர்பில் உறுதியாக தனக்கு தெரியாது என்று கூறும் இராஜங்க அமைச்சர், கடந்தகாலங்களில் இந்திய இராஜதந்திர நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் விசேட பிரதிநிதிகள் செயற்பட்டிருக்கின்ற முன்னுதாரணங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை வைத்துப்பார்க்கின்ற போது, தற்போதைய ஆட்சியாளர்கள் தமது செயற்பாடுகள் தொடர்பில் இந்தியாவின் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட உயர்மட்டத்தரப்பினரை நேரடியாக அணுகவல்ல, விளக்கமளிக்கவல்ல ஒருவரையே தூதுவராக நியமிக்க திட்டமிட்டிருக்கின்றது என்பது புலனாகின்றது.

இவ்வாறான நிலையில் இந்திய இராஜதந்திர தரப்புக்களுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருக்கும் மிலிந்த மொறகொட அதற்கு மிகப் பொருத்தமானவர் என்று அரசாங்கம் கருதுகின்றது.

மேலும் அண்மைய காலங்களில் மிலிந்த மொறகொட தனது "பாத் பைன்டர்" அமைப்பின் ஊடாக இந்திய இராஜதந்திர தரப்புக்களுடனான உறவுகளை நெருக்கமாக்கி கொண்டுள்ளார். அந்த உறவுகள் மூலமாக ராஜபக்ஷவினரின் மீள் வருகைக்கும் உதவிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார். இந்தச் செயற்பாடுகள் அவருடைய "இந்திய உறவுகளின்" பலத்தினை நிச்சயம் புடம்போட்டுக் காட்டியிருக்கும்.

அத்துடன் அந்த அமைப்பில் தற்போதைய வெளியுறவுகள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகேயும் பணியாற்றியுள்ளார். ஆகவே ஜயநாத் கொலம்பகே, மிலிந்த மொறகொட ஆகியோருக்கு இடையிலான நெருக்கமும், மிலிந்தமொற கொடவுக்கும், இந்திய இராஜதந்திர தரப்புக்களுக்கும் இடையிலான நெருக்கமும் தமக்கு இரட்டிப்பு பலம் என்றே ஆட்சியாளர்கள் கருதமுடியும்.

மிலிந்தமொறகொடவைப் பொறுத்தவரையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக 2000 ஆண்டு பாராளுமன்றுக்கு பிரவேசித்தவர் 2001 இல் மீண்டும் கொழும்புமாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். நீதி மற்றும் சட்ட மறு



சீரமைப்பு, சுற்றுத்துறை, பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்பம் ஆகிய துறைகளின் அமைச்சராக செயற்பட்டுள்ளதோடு திட்டங்களை செயற்படுத்தலும், மேம்படுத்தலும் பிரதி அமைச்சராகவும் இருந்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையிலும் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தின் சார்ப்பில் கலந்து கொண்டார். பின்னர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சதந்திரக் கட்சியில் இணைந்து செயற்பட்டவர் 2010 பொதுத்தேர்தலில் தோல்வி கண்டார்.

அதன் பின்னர் "இராஜதந்திர உறவுகளை" அடிப்படையாக வைத்து "பாத் பைண்டர்" என்ற அமைப்பை உருவாக்கி கடந்த பத்து வருடங்களாக பணியாற்றி வருகின்றார். அத்தகையவர் ஆட்சி மாற்றம் இடம்பெற்று சொற்ப காலத்திலேயே, மாகாணசபை முறைமை இலங்கைக்கு பொருத்தமற்றது எனவும், தேவையற்ற பாரிய செலவை ஏற்படுத்தும் முறைமை எனவும், உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்த வேண்டும் எனவும் அவரது பாத்பைன்டர் அமைப்பின் ஆய்வின் ஊடாக கருத்து வெளியிட்டு இருந்தார்.

இத்தகைய நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கும் ஒருவர், ஏற்கனவே மாகாண சபைமுறைமைக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கும் ஆட்சியாளர்களினால் "அதிகாரங்களுடன்" நியமிக்கப்படுகின்றார் என்றால் அவர் ஊடாக தமது எண்ணக்கருக்களை இந்தியத் தரப்பினுள் "விதைத்து" சிக்கல்களின்றி தமது செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுப்பதற்கே ஆகும். இதுவே ராஜபக்ஷ தரப்பின் இராஜதந்திர நகர்வாக இருக்கின்றது.

# அபிவிருத்தி செய்வதாகக் கூறி

# வாக்கு பெற்றவர்களை தூங்க விடக்கூடாது

(போரதீவுப்பற்று)

அபிவிருத்தி என்று கோசமிட்டு மக்களின் வாக்குகளை பெற்றவர்களைத் தூங்கவிட கூடாது எனப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு- போரதீவுப்பற்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



"தற்போதுள்ள அரசாங்கமானது பாரிய அசுர பலத்துடன் உள்ளது. அவர்கள் நினைத்ததை செய்வதற்காகவும்தான் 20 ஆவது அரசியல் சீர்திருத்த சட்ட மூலமொன்றை உருவாக்கியுள்ளனர்.

ஆகவே, இனி நாம் அபிவிருத்தி என்று கோசமிட்டு மக்களின் வாக்குகளை பெற்றவர்களைத் தூங்கவிடக் கூடாது. அவர்களிடம் சென்று எமக்கு தேவையானதைக் கூறி அவற்றைப் பெற்று வரும்படி அழுத்தம் கொடுக்க வேண்டும்.

என்னால் முடிந்த செயற்பாடுகளை எனது காலத்தினுள் நிச்சயம் செய்து தருவேன்" என அவர் மக்களுக்கு உறுதியளித்துள்ளார். (ஜ-4)

## சட்டவிரோத காடழிப்பு விவகாரம் சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு



(ஆனைவிழுந்தான்)

ஆனைவிழுந்தான் சரணாலயத்திற்கு சொந்தமான இடத்தில் சட்ட விரோதமான முறையில் காடழிப்பு செய்த சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் நீதவான் நீதிமன்ற நீதவான் மஞ்சுள ரத்நாயக்க கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

சிலாபம் ஆனைவிழுந்தான் சரணாலயத்திற்கு சொந்தமான இடத்தில் சட்ட விரோதமான முறையில் காடழிப்பு மேற்கொண்டமை தொடர்பில் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரினால் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த சந்தேக நபர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 100 இளம் ஜோடிகள் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளவயதுடைய 100 ஜோடிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுர புனித பூமியில் முறையற்ற வகையில் நடந்துகொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையிலே இவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஜ-4)

## தீப்பற்றிய கப்பல் குறித்து விசாரிக்க குழு வருகை



(கொழும்பு)

எரிபொருள் சரக்குகளை இந்தியாவுக்குக் கொண்டு செல்லும் போது, இலங்கை கடற்பரப்பில் திடீரென தீப்பிடித்த நியூடயமண்ட் கப்பல் சம்பவம் குறித்து விசாரிக்க இங்கிலாந்தைச் சேர்ந்த நிபுணர் குழு நேற்று நாட்டிற்கு வந்துள்ளது.

நேற்றுக் காலை 6.55 மணிக்கு இங்கிலாந்திலிருந்து சிறப்பு விமானம் மூலம் இந்த குழு மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. (ஜ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2108

**நாதன்**



கனவுகள் எல்லாம் வரம் தான்... தீர்க்க முடியாத துக்கத்தையும் அடைய முடியாத ஆசைகளையும் கனவு தான் தீர்த்து வைக்கிறது...

**சுரேஷ்**

யாருக்கும் இறைவனை காணும் மனமில்லை போல, ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் என்றிருந்தும் இன்னும் ஏழைகள் அழுது கொண்டிருக்கிறார்களே!!



**டயன்சிகா**

தேவையற்ற பேச்சு உன் வளர்ச்சியை தடுக்கும்!



**சரஸ்வதி**

ஒரு பெண் தனிமையில் இருந்தால்...



அவள் உனக்கு வாய்ப்பல்ல...பொறுப்பே.

**ஆகிசன்**

உனக்கு பிடித்ததை நினைத்துப்பார் பொருள் கூட உயிர் தான்...!!!



**ஐலா**


என்னதான் கோபம் இருந்தாலும் என்னை பத்திரமா பாத்துக்க மட்டும் நீ மறந்ததே இல்லை.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆங்கில உயர் டிப்ளோமாதாரிகளை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ளுங்கள்

## இம்ரான் மஹரூப் கோரிக்கை



**(கொழும்பு)**

**ஆங்கில உயர் டிப்ளோமாதாரிகளை (HNDE) ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ள ஆவன செய்யுமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஐ.கே. ஜி.முத்துபண்டாவை சந்தித்து திருகோணமலை மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர் பாக கலந்துரையாடிய போதே அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

ஆங்கில உயர் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் அண் மையில் பாராளுமன்ற உறுப்பி னரைச் சந்தித்து நீண்ட கால மாக டிப்ளோமாதாரிகளுக்கான நியமனம் வழங்கப்படாமல் உள்ளது. எனவே தமக்கான நியமனம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடு த்திருந்தனர்.

இதன் அடிப்படையிலேயே இம்ரான் இந்தக் கோரிக்கை யைக் கல்வி அமைச்சின் செய லாளரிடம் முன்வைத்துள்ளார்.

இது குறித்து தான் நடவடி க்கை எடுப்பதாக இதன்போது கல்வி அமைச்சின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினரிடம் உறுதியளித்துள்ளார். (ஐ-4)

# தேர்தல்கள் ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்க வேண்டும்

## சந்திம சுட்டிக்காட்டு



(கொழும்பு)

20ஆவது அரசியலமைப் புத் திருத்தச் சட்ட வரைபில் முன்வைக்கப்பட்டுள்ள வித த்தில் தேர்தல்கள் ஆணைக் குழுவை நியமிப்பதை ஜனா திபதி மேற்கொள்வதை விட அந்த அதிகாரத்தை பாராளு மன்றத்திற்கு வழங்குவது மிக வும் பொருத்தமானது என ஸ்ரீல ங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சந் திம வீரக்கொடி தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்று முன்தி னம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்.

"தேர்தல்கள் ஆணைக் குழுவை ஜனாதிபதி நியமிக் காது, அதனை நியமிக்கும் அதி காரத்தை பாராளுமன்றத்தி ற்கு வழங்கினால் மிகவும் செயற்பாட்டு ரீதியானதாக இரு க்கும் என நான் நினைக்கின் றேன்.

நாங்கள் மக்கள் பிரதிநிதி கள் என்ற வகையில் அரசி ய லமைப்புத் திருத்தச் சட்டம் விவாதத்திற்கு உட்படுத்தப்ப டும் போது தனிப்பட்ட நிலைப் பாடுகளை முன்வைக்க எதிர் பார்த்துள்ளோம்" எனவும் சுட் டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# ஐ.தே.க.-ஐ.ம.ச.முறுகல் நிலையில்

## கலந்துரையாடல் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற் றுக்கிடையேஒருகூட்டணிஅமை ப்பதற்காக மேற்கொண்ட கல ந்துரையாடலில் முறுகல் நிலை ஏற்பட்டதால் கலந்துரையாடல் இடைநிறுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஐக் கிய மக்கள் சக்தி சார்பாக அக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க கலந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மற்றும் கருஜெயசூரிய ஆகியோருடன் கலந்துரையா டினார். இருப்பினும் சஜித் பிரேம தாஸவிற்குஎதிராகஐக்கியதேசியக் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்த மையினால் இக்கலந்துரையா டல் இடைநிறுத்தப்பட்டது.(ஐ-6)

# போலி குழுக்கள் தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

சமூக வலைத்தளங்களில் பொய்யான பிரசாரம் செய்து பண மோசடியில் ஈடுபடும் திட்ட மிட்ட குழுக்கள் சில செயற் படுகின்றதாகவும் பொதுமக்கள் இவற்றின் உண்மைத்தன் மையை அறியாமல், அவர்களி டம் சிக்கிக்கொள்ள வேண்டாம் என பொலிஸ் தலைமையகம் பொதுமக்களை அறிவுறுத்தி யுள்ளது.

மேலும் இம்மோசடி நடவடி க்கை தொடர்பில் தற்போது அதிக முறைப்பாடுகள் கிடை க்கப்பெற்று வருகிறதாகவும் இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையி லேயே பொலிஸ் தலைமை யகம் இவ் அறிவித்தலை விடு த்துள்ளது.

அத்துடன் குறித்த குழு தொட ர்பில் கிடைத்துள்ள முறைப்பா டுகளை, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணனி குற்றவியல் பிரிவுக்கு அறி க்கையிட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ஐ-6)

# எதிர்வரும் சில நாட்களில் சிறிய நில அதிர்வுகள் ஏற்படலாம்

## விடுவிக்கப்பட்டது எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் மகா வலி நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள பிரதேசங்களில் சிறிய நில அதிர்வுகள் ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது.

நீர்த்தேக்கத்தின் நீர் அழு த்தம் காரணமாக அல்லது நீர்த் தேக்கத்திற்கு அருகில் சுண் ணாம்புக் கல் உடைக்கும் போது ஏற்படும் அழுத்தம் காரணமாக இவ்வாறான அதிர்வுகள் ஏற்ப டக் கூடும் என, பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியி யல் பிரிவின் பேராசிரியர் திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி, இம்மாதம் 2 ஆம் திகதி விக்டோரியா நீர்த்தேக்கத்தி ற்கு அருகில் உள்ள பிரதேச ங்களில் இரண்டு ரிக்டர் அள வில் நில அதிர்வு ஏற்பட்டிருந் தது.

இந்த நில அதிர்வு விக்டோ ரியா நீர்தேக்கத்திற்கு அருகில் உள்ள பிரதேசங்களுக்கு மட்டு ப்படுத்தப்பட்டதென அவர் குறிப் பிட்டுள்ளார்.

நீர்த்தேக்கங்களுக்கு அரு கிலுள்ள பாறைகளில் பெரும் பாலானவை டோலமைட் சுண் ணாம்பு, சிதைந்த கார்பனேட் பாறைகள் உள்ளதென அவர் கூறியுள்ளார்.

இந்த பாறைகளின் அழுத் தம் குறைந்தமையினால் கட ந்த இரண்டு நாட்களாக நில அதிர்வு ஏற்பட காரணம் என வும் இந்த நிலைமையை இல குவாக எடுத்துக் கொள்ளக் கூடாது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இவ்வாறான நில அதிர் வுகள் எதிர்வரும் நாட்களிலும் ஏற்பட கூடும் எனவும் நீர்த்தேக் கத்தின் நீர்மட்டத்தின் அளவு குறைந்து கூடினால் இந்த நிலைமை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஐ-4)

# பல அத்தியாவசிய மருந்துகளின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

பல அத்தியாவசிய மருந்துக ளின் விலையைக் கட்டுப்படுத் துவதற்குத் தேவையான நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்ப ட்டு வருவதாக ஔடத உற்பத் திகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் பல அத் தியாவசியமான மருந்துப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தீர்மா னிக்கப்பட்டுள்ளதாகவும் கட ந்த அரசாங்கத்தின் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சில மருந்துப் பொருட்களின் விலை மற்றும் தரம் குறித்தும் தாம் விசேட கவனம் செலுத்தியுள்ள தாகவும் இராஜாங்க அமைச் சர் சன்ன ஜயசுமன தெரிவித் துள்ளார். (ஐ-6)




# வாங்கினால்தானே அது என்னுடையது

ஒரு அலுவலகத்தில் பணியாற்றும் மேலதிகாரி, எப்போதும் சக ஊழியர்களைத் திட்டிக் கொண்டே இருப்பார்.

எப்பொழுதும் எரிந்து விழுந்து கொண்டும், வாய்க்கு வந்த படி திட்டிக் கொண்டும் இருப்பார். இதனால் அவருடன் பணியாற்றும் ஊழியர்கள் எப்போதும் மன வருத்தத்துடன் இருப்பார்கள்.

இதுபோன்ற சூழ்நிலையில், ஒருவர் புதிதாக பணிக்கு சேர்ந்தார். அவரையும் அந்த மேலதிகாரி திட்டித் தீர்த்தார்.

ஆனால், புதிய இளைஞனின் முகத்திலோ எந்தப் பதற்றமும் இல்லை, கவலையும் இல்லை. எப்போதும் போல தனது வேலையை அவரே செய்து வந்தார்.

இதனைக் கண்டதும் மற்ற ஊழியர்களுக்கு மிகவும் ஆச்சரியம். என்னப்பா அவர் உன்னை அப்படி திட்டுகிறார்.

ஆனால் அதை நீ கண்டு கொண்டதாகக் கூட தெரியவில்லையே. எப்போதும் முகத்தை சிரித்தபடியே வைத்துக் கொண்டு வேலை செய்ய உன்னால் மட்டும் எப்படி முடிகிறது என்று கேட்டார்கள்.

இதற்கு அந்த ஊழியர் அளித்த பதில், அந்தத் தெருவின் முனையில் இரு காதலர்கள்



பேசிக்கொண்டிருக்கும் இடத்தை சுட்டிக் காண்பித்து அங்கே பாருங்கள் புரியும் என்றார்.

அங்கே பார்த்தும் புரியாத விழிகளோடு புரியவில்லையே எனக் குழப்பமாகச் சொன்ன ஊழியர்களிடம் கேட்டார்.

அந்தக் காதலன் தன் காதலியிடம் ஏதோ ஒன்றைக் கொடுக்க முயற்சி செய்கின்றான். தெரிகின்றதா?

ஏதோ பரிசுப்பொருள் போல் தெரிகிறது. ஏதோ கோபம் காரணமாக காதலன் எவ்வளவு தான் கொடுக்க முயற்சி செய்தாலும் காதலி அந்தப் பரிசுப் பொருளைப் பெற்றுக்கொள்ளவேயில்லை.

புதிய இளைஞன் கூறினான், அந்தப் பெண் அந்தப் பரிசை வாங்காதவரை அந்தப் பரிசுப்பொருள் யாருக்குச் சொந்தம்? நிச்சயம் அது அந்தக் காதலனுக்குத்தான் சொந்தம் என்று சொன்னார்கள் மற்றவர்கள். அப்போது... இந்தப் பதிலைக் கேட்டு சிரித்துக் கொண்டே சொன்னார்.

அதேதான் என் கதையிலும்... மேலதிகாரி தனது மூர்க்கத்தனத்தையும், கோபத்தையும் என்னிடம் தருவதற்கு எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் நான் அதை வாங்கிக் கொள்ளவேயில்லை.

அதனால்தான் நான் அவர் என்னிடம் காட்டிய கோபத்தை நான் வாங்கிக் கொள்ளவில்லை என்றார்.

இதைக் கேட்ட மற்ற ஊழியர்கள் திகைத்து நின்றனர்.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்



திருப்புவனம்

பெரிய கோயிலைக் கட்டுவதற்கு முன்பு, சில சமய நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. திசை, வாஸ்து எல்லாம் பார்த்துத் திருக்கோயில் எழும்ப வேண்டிய இடம் முதலில் தேர்வு செய்யப் பட்டது.

தேர்ந்தெடுத்த இடத்தை அசுத்தங்கள் இல்லாமல் சுத்தமாக்கி, யானைகளைக் கொண்டு நடக்கச் செய்து மண்ணைக் கெட்டிப்படுத்தினார்கள்.

கோயில் கட்டப்பட்ட காலத்தில் பசுக்களைப் பல வருடங்களுக்கு கட்டி வைத்து அந்தப் பசுக்களின் கோமியம் மற்றும் சாணம் பெரிய கோயில் கட்டப்பட்ட இடத்தில் பல பகுதிகளிலும் விழுமாறு செய்து அந்த இடத்தைப் பவித்திரமாக்கி தோசங்களை நீக்கியிருக்கின்றார்கள்.

இந்தத் தோச காரியங்கள் எல்லாம் முடிந்த பிறகு, இன்று கடைக்கால் நடுவதற்கு முன்னால் நிலத்தைக் கோடுகளால் பிரிப்பது போல், அப்போதும் கிட்டத்தட்ட இதே நடைமுறை பின்பற்றப்பட்டது.

கோயில் கட்டப்போகும் முழு இடத்தையும் குறிப்பிட்ட அளவுடைய கட்டங்களாகப் பிரித்து, அதில் ஒவ்வொரு கட்டத்தையும் காப்பதற்கு ஒரு தேவதையை வழிபட்டிருக்கின்றார்கள்.

அதற்கு பதவிந்யாசம் என்று பெயர். இந்தத் தேவதைகளில் அஷ்டதிக் பாலகர்கள் (எண்திசைக் காவலர்) மிக முக்கிய மானவர்கள்.

சரி, அந்தக் கோடுகளை எப்படி வரைந்திருப்பார்கள்? அங்கே தான் சோழர் கால சுவாரசியத்தை உள்ளே கொண்டு வருகின்றார்கள்.

கட்டட வளாகம் முழுக்க தரையில் நெல்லைப் பரப்பி அதில் தான் கட்டம் வரையப்பட்டது. அதாவது நெற்பரப்பையே கோயிலாக நாம் எண்ணிக் கொள்ள வேண்டும். கட்டங்கள் வரைந்த பிறகு, பூஜை நடைபெற்றுக் கட்டுமான வேலைகள் ஆரம்பமாயின.

இன்று, நவீனக் கட்டடங்கள் எல்லாம் நில நடுக்கத்தால் பாதிக்கப் படும்போது பெரிய கோயில் இன்றுவரை ஜம்மென்று இருக்கிறது. 1342 இல் தமிழகத்தில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது தமிழகத்தில் இருந்த பல கட்டடங்கள் அதனால் பாதிப்புக்குள்ளாகின.

ஆனால் 1342 மட்டுமல்ல அதன் பிறகு, தஞ்சாவூரில் ஏற்பட்ட பத்துக்கும் மேற்பட்ட நில நடுக்கங்களையும் எதிர் கொண்டு அதே பலத்துடன் வலுவாக நின்று கொண்டிருக்கின்றது பெரியகோயில்.

1000 ஆண்டுகளாகப் பூமியின் அதிர்வுகளைத் தாங்கி நிற்கிறது. சரியான அளவு கொண்ட கற்களை, ஒவ்வொரு அடுக்கிலும் நான்கு கற்கள் என்ற கணக்கில் அடுக்கிக்கொண்டே போய், பாறையில் எப்போது விரிசல்கள் விழுகின்றன என்பதைக் கவனித்து, அதற்குப் பிறகே கடைக்காலின் அளவுகள் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன.

அதாவது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாறையின் தாங்கு திறனைச் சோதித்துப் பாறையின் மேல் வரும் அழுத்தம் குறித்த சோதனைகளும் நடைபெற்றுள்ளன.

(தொடரும்)

வாயால் போதிப்பதைவிட உன் நடத்தையே சிறந்த போதனையாக அமையும்.
– கோல்ட் ஸ்மித்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் பற்றறுத்து அரசியல் செய்மினே!

சைவாலங்களில் நடைபெறுகின்ற மகோற்சவம் என்பது நித்தியபூசைகளில் ஏற்படக்கூடிய தவறுகளை நிவர்த்தி செய்வதற்கானதாகும்.

எனவே மகோற்சவத்தில் தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது சிவாச்சாரியர்களின் கடமை.

தவிர, திருவிழாக்கள் என்பது இறைவனின் ஐந்தொழிலைக் குறிப்பதாகும்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழிலை அடிப்படையாகக் கொண்டு திருவிழாக்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இங்கு சிவப்பரம்பொருளே ஐந்தொழிலைப் புரிகின்றாராயினும் ஒரே வடிவத்தில் அவர் ஐந்தொழிலைப் புரிவதில்லை.

மாறாக படைத்தல் – பிரம்மா, காத்தல் – விஷ்ணு, அழித்தல் – உருத்திரன், மறைத்தல் – மகேஸ்வரன், அருளல் – சதாசிவன் என்ற வடிவத்தைத் தாங்கியே ஐந்தொழில் ஆற்றப்படுகிறது.

இந்த உலகப் பிரபஞ்சம் முழுமையும் இயங்குவதற்கானதே பஞ்ச கிருத்தியமாகும்.

இஃது மனித உறவு நிலைகளுக்கும் பொருத்துடையது. அதாவது தனி ஒருவர் தந்தை, மாமன், ஆசிரியர், அதிகாரி எனப் பல வடிவங்களைத் தாங்குகிறார்.

ஆசிரியப் பணியை ஆற்றுகின்ற ஒருவர் தனது பணி இடத்தில் தந்தையாகவோ அன்றி மாமனாகவோ அன்றி அதிகாரியாகவோ இருக்க முடியாது.

மாறாக அவர் ஆசிரியராக மட்டுமே இருக்க முடியும்.

இதுபோல தந்தை என்ற ஸ்தானத்தில் இருக்கும்போது, ஒருவர் தன்னை அதிகாரியாகப் பாவனை செய்வாராயின் குடும்பத்தில் குழப்பத்தைத் தவிர வேறு எதுவும் நடக்காது.

இந்த அடிப்படையைக் கூறும்போது, இஃது எதற்கு என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், அந்தக் கேள்விக்கான பதில் இதுதான்.

எங்கள் தமிழ் அரசியலில் இருக்கக்கூடிய தவறுகளைக் களைந்து இனத்துவம் சார்ந்த அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இதற்காக தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது கட்டாயமானது.

எனினும் தமிழ் அரசியல் தரப்புகளிடையே முழுமையான ஒற்றுமையை ஏற்படுத்துவதென்பது முடியாத காரியமாகவே இருந்து வருகிறது.

இதற்கான காரணம் என்ன என்றால், இங்குதான் ஒரே வடிவத்தில் நின்று கொண்டு நாம் எல்லாக் காரியங்களையும் செய்ய விளைகின்றோம்.

அவ்வாறு முனையும்போது தோல்விகளும் பகைமைகளும் வெறுப்புகளும் விரக்திகளும் எங்கள் அரசியல் புலத்தில் ஏற்பட்டு விடுகின்றன.

ஆக, தேர்தல் அரசியல் என்ற வடிவத்தை துறந்து – தேர்தல் பற்றைக் களைந்து மக்களுக்கான அரசியல் என்ற வடிவத்தைத் தாங்கும் போதுதான் தமிழ் அரசியல் தரப்பில் முழுமையான ஒற்றுமை ஏற்பட முடியும்.

இருந்தும் தேர்தலை துறந்து அரசியல் செய்வதற்கு யார் உளர் என்பதுதான் இங்கிருக்கக்கூடிய முக்கிய விடயம்.

# மாகாண சபை முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டும்

## சீலரத்ன தேரர் கோரிக்கை

(கம்பஹா)

மாகாண சபைத் தேர்தல் மற்றும் அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பாக தற்போது பேசப்பட்டு வருவதால், அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளதாலும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டும் என ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பத்தரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே இதனை கூறியுள்ளார்.

தற்போது சில அரசியலமைப்புத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. எந்த அரசியலமைப்புச் சட்டத்தின்படியும் எந்த தலைவரும் சரியாக செயற்படவில்லை. மகிந்த ராஜபக்ச மூன்று தசாப்தங்களாக இருந்து வந்த போரை முடிவுக்கு கொண்டு வந்தார். நிறைவேற்று அதிகாரம் காரணமாகவே அவர் அதனை செய்ய முடிந்தது. எனினும் 19ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட நபருக்கு எதனையும் உரிய நேரத்தில் செய்ய முடியாமல் போனது.

19ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து 20ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வரவுள்ளனர். சிறந்த நபரிடம் இந்த அரசியலமைப்புச் சட்டம் சென்றால் நல்லது. கோட்டாபய ராஜபக்ச கெட்டவர் எனக் கூறவில்லை. காரணம் கோட்டாபய ராஜபக்ச இராணுவத்தில் கடமையாற்றிய அதிகாரி. அவர் இந்த நாட்டை நேசிக்கின்றார். இது எனது. இதனை பாதுகாக்க வேண்டும் என்பது அவருக்கு தெரியும்.

இதனால், அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய அதிகாரங்கள் கோட்டாபய ராஜபக்சவுக்கு கிடைத்தால் பரவாயில்லை. அவர் ஜனாதிபதியாக இருக்கும் வரையில் நல்லது. எனினும் சில நேரம் மூளையில்லாத ஒருவருக்கு சென்றால் என்ன நடக்கும் என்பதை எண்ணிப் பார்க்க முடியாது. அப்படியான நபருக்கு அதிகாரம் கிடைத்தால் நாடும் அழிந்து விடும். நாட்டின் பிள்ளைகளும் அழிந்து விடுவார்கள்.

அதேவேளை கடந்த இரண்டு ஆண்டுகளாக எவரும் மாகாணங்களை ஆட்சி செய்யவில்லை. நிர்வாகம் நடந்து கொண்டிருக்கின்றது. இதனால் மாகாண சபை எமக்கு தேவையா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எமக்கு மாகாண சபைகள் தேவையில்லை. அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளதால், மாகாண சபைகளை இரத்துச் செய்ய தலையிட வேண்டும். மாகாண சபைகளை ஒழிப்பது நல்லது எனவும் சீலரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** உடுப்பிட்டி, பொலிகண்டி, வல்லை, தொண்டைமானாறு, வல்வெட்டித் துறை, அக்கரை, வளலாய் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வாரிக்குட்டியூர், பம்பைமடுவிலிருந்து குருக்கள் புதுக்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம்கடற்படை முகாம், பம்பை மடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், நித்திய நகர் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** முள்ளிக்குளம், கரடிக்குழி, கொக்குப்படையான், கொண்டாச்சி, முசலி, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படைமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பரு. ஆதார வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவ பகுதி இன்று கையளிப்பு

(கரணவாய்)

துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட சிறுவர் மருத்துவ பகுதி கையளிப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெறும்.

புற்றளை பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த அமரர் விஜயரட்ணக் குருக்கள், அமரர் சந்திரகுமாரி ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறை அம்மன் கோவிலைச் சேர்ந்த சுவிசில் வசிக்கும் திரு.திருமதி மாதவன் கீதா அவர்களின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்ட இவ் விடுதி வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸினால் திறந்து வைக்கப்படும்.


(ஞா-60)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

சரியானது என்று உணர்ந்த பின்னும் அதைச் செய்யாது இருந்தால் அது மகா கோழைத்தனம்.
-கன்பூஷியஸ்

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கவலை ஏன்?



பொருள், புகழ், செல்வாக்கு, புலனின்பம் என்பனவற்றில் பேராசை கொண்டு, கற்பனையால் சில வரவுகளை எதிர்பார்ப்பார்கள் அல்லது பிறரிடம் இருந்து கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். செயலுக்குத் தக்க விளைவு என்பது இறையாற்றலின் திருவிளையாடலாக இருக்கிறது. இந்த உண்மையறியாமல் செயலின்றிக் கற்பனையால் ஒரு விளைவை எதிர்பார்ப்பதும், கடமைக்கும் உறவுக்கும் பொருந்தாமல் பிறரிடமிருந்து ஒன்றை எதிர்பார்ப்பதோ அல்லது ஆசையின் பெருக்கத்தால் அளவுக்கதிகமாக எதிர்பார்ப்பதோ வெற்றியடைவதில்லை. இது இயற்கை நியதி. சிந்தனையின்றி இயற்கையின் நியதிப்படி அமைந்த விளைவுகளை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்பார்த்த ஆசையையும் அப்படியே வைத்துக் கொண்டு, ஏமாற்றத்தையும் ஒப்புக் கொள்ளாமல், ஏற்படும் மனப்பிணக்கு தான் கவலை. இங்கு கடமைகளை ஒட்டி, செயல்களையொட்டித் திட்டமிட்ட விளைவுகளை எதிர்பார்ப்பது தவறாகாது. இது கடமையைச் சார்ந்ததாகும்.

கற்பனை எதிர்பார்ப்பும் நீதியான தோல்வியும் பற்றியே இங்கு சிந்திக்கிறோம். தோல்வி தான் இயற்கை நீதியென்று ஒப்புக் கொண்டால் தனது தவறு என்ற கற்பனை எதிர்பார்ப்புக் கலைந்து போகும். இந்த இரண்டையுமே ஒன்றோடு மற்றொன்றைச் சேர்க்காமல் வைத்துக் கொண்டு இரு நினைவுகளுக்கு மத்தியிலே மனதை வைத்துக் கொண்டு வருந்துவது தான் கவலை. எனவே, ஒருவர்படும் கவலையும் உள் ஒன்றிருக்கப்புறம் ஒன்று நினைக்கும் பொருந்தா மனநிலையே. இந்நிலையும் அறிவின் வளர்ச்சியைத் தடுக்கும்.

அறிவின் வளர்ச்சியுடைய உயிர்தான் ஆக்க வாழ்வு பெற முடியும். அறிவின் மதிப்புக் குறையாமல் உயிர் போனாலும் சரி அதை ஏற்றுக் கொள்வோம். அறிவு கெட்டு உயிர் நீடித்துப் பயனில்லையென்பது அறிஞர் கண்ட தெளிவு.

# யாழ். கிரிக்கெட் சம்பியன்ஸ்-2020
# யாழ். ஜொனியன்ஸ் அணி அரையிறுதிக்கு தெரிவு



யாழ்.கிரிக்கெட் சம்பியன் 2020 தொடரில் 3ஆவது கால் இறுதிப் போட்டி கடந்த மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை யன்று மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி, சென்றலைட்ஸ் அணியை 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 39.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 162 ஓட் டங்களை பெற்றது.

போட்டியில் நிஸான்-12 ஜெயதர்ஸன்-30, டார்வீன்-46, நிரோஜன்-13, தசோபன் ஆட்டமிழக்காது 16 ஓட்டங் களை பெற்றனர்.

களத்தடுப்பில் யாழ்.ஜொனி யன்ஸ் அணி சார்பாக சன்ச யன்-02, கபில்ராஜ் -01 யதுஸன்-04, லவேந்திரா-02 அபிநாஸ்-01 விக்கெட்டுக்க ளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 32.3 ஓவர்களில் 8 விக்கெட் டுக்களை இழந்து 164 ஓட்டங் களை பெற்றது.

போட்டியில் யதுஸன்-19, கானமிர்தன்-19,லவேந்திரா-27, அபிநாஸ் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் சென்றலைட்ஸ் அணி சார்பாக அலன்ராஜ்-02 ஜேம்ஸ் விதுஸன், தசோபன், டார்வின் ஜெரிக் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற் றினர். (4)

# பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்கள் கரப்பந்தாட்ட போட்டிகள்




யாழ்.மாவட்ட பிரதேச செய லகங்களுக்கு இடையிலான ஆண்களிற்கான கரப்பந்தாட்ட போட்டியில் கோப்பாய் பிர தேச செயலக அணி சம்பியனா கியது.

இப்போட்டி கடந்த 2ஆம் திகதி புதன்கிழமை ஆவரங் கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்றது.

இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

5 சுற்றுக்கள் கொண்ட போட் டியில் முதலாவது சுற்றில் கோப் பாய் பிரதேச செயலக அணி 29:27 என்ற புள்ளிகள் வித் தியாசத்தில் வெற்றி பெற 2 ஆவது சுற்றில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 28:26 என்ற புள்ளிகள் வித்தியாசத் தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தனர்.

3 ஆவது சுற்றில் மீண்டும் கோப்பாய் பிரதேச செயலக அணி 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற அதற்கும் தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் சண்டிலிப்பாய் பிர தேச செயலக அணி 26:24 என்ற புள்ளிகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்று ஆட் டத்தை சமநிலைப்படுத்தினர்.

இதனால் வெற்றி தோல்வி யைத் தீர்மானிக்கும் 5ஆவது சுற்றில் இரு அணிகளுக்கும் சவாலாக அமைந்தது.

இதில் கோப்பாய் பிரதேச செயலக அணி 15:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியனாகி யது. (4-60)

# கரீபியன் பிறீமியர் லீக் ட்ரின்பகோ அணி வெற்றி



கரீபியன் பிறீமியர் லீக் இரு பது-20 தொடரின் 27 ஆவது லீக் போட்டியில், ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணி 23 ஓட் டங்களால் வெற்றி பெற்றுள் ளது.

ட்ரினிடெட் மைதானத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று முன் தினம் சனிக்கிழமை நடை பெற்ற இப்போட்டியில், ட்ரின் பகோ நைட்ரைடர்ஸ் அணியும், சென்.லூசியா ஸூக்ஸ் அணி யும் மோதின.

இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.லூசியா ஸூக்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மா னித்தது.

இதன்படி முதலில் களமி றங்கிய ட்ரின்பகோ நைட் ரைடர்ஸ் அணி, நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 175 ஓட்டங்களை பெற்றுக் கொண் டது.இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பிராவோ 50 ஓட்டங்களையும், பொலார்ட் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில், குக்லெய்ஜன் 2 விக்கெட்டுகளையும், கெஸ் ரிக் வில்லியம்ஸ், ஸஹீர் கான் மற்றும் சமி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 176 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்.லூசியா ஸூக்ஸ் அணியால், 20 ஓவ ர்கள் நிறைவில் 7 விக்கெட் டுகள் இழப்பிற்கு 152 ஓட்ட ங்களை மட்டுமே பெற முடி ந்தது. இதனால் ட்ரின்பகோ நைட்ரைடர்ஸ் அணி 23 ஓட்ட ங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதி கபட்ச ஓட்டங்களாக, ஹென்றி பிளெட்ச் 42 ஓட்டங்களையும், மார்க் டியால் 40 ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில், பொலார்ட் 3 விக் கெட்டுகளையும், டுவைன் பிரா வோ மற்றும் ஜெய்டன் சீலர்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெ ட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாய கனாக, பந்துவீச்சில் 3 விக்கெட் டுகளையும் 42 ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்ட பொலார்ட் தெரிவு செய்யப்பட்டார். (4)

# ஐ.பி.எல்.தொடரில் விளையாட முஷ்டபிசுர் ரஹ்மானுக்கு மறுப்பு

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னணி வேக ப்பந்து வீச்சாளரான முஷ்டபிசுர் ரஹ்மானுக்கு, நடப்பு ஐ.பி.எல். தொடரில் விளையாட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி வேகப்பந்து வீச்சாளர் ஹாரி கர்னி, தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளதால் அறு வைச் சிகிச்சை மேற்கொள் ளவுள்ளதனை காரணம் காட்டி சமீபத்தில் நடப்பு தொடரிலிரு ந்து விலகுவதாக அறிவித்தார்.

இந்நிலையில் அவருக்கு மாற்றிடாக முஷ்டபிசுர் ரஹ் மானைத் தேர்வு செய்ய கொல்



கத்தா அணி விரும்பியது. ஆனால் ஐ.பி.எல். தொடரில் விளையாட முஷ்டபிசுருக்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அனுமதி மறுத்துள்ளது.

ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பங்களாதேஷ் அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள் ளது. இதன் காரணமாக அனு மதி மறுக்கப்பட்டதாக பங்களா தேஷ் கிரிக்கெட் சபை விளக்கம் அளித்துள்ளது.

24 வயதான முஷ்டபிசுர் ரஹ்மான், இதுவரை ஐ.பி.எல். தொடரில் சன்ரைஸஸ் ஹைத ராபாத் மற்றும் மும்பை இந் தியன்ஸ் அணிக்காக 24 போட்டிகளில் விளையாடி 24 விக்கெட்டுகளை கைப்பற்றி யுள்ளார்.இறுதியாக முஷ்டபிசுர் ரஹ்மான், 2018ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணிக் காக விளையாடினார். அப் போது அந்த தொடரில் 7 போட் டிகளில் விளையாடி 7 விக் கெட்டுகளை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## ஓய்வுபெற்ற...

தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள கோப்பாய்ப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

எதிர்த்திசைகளில் வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் வடமராட்சி கல்வி வலயத்தில் கணித பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள அல்வாய் வடக்கைச் சேர்ந்த மகாலிங்கம் வின்சன் கோமகன் (வயது - 65) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா-60)

## இரண்டு பவுண்...

கொள்ளையரினால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் இராமாவில் பகுதியில் பிற்பகல் 1.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராமாவில் முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற சங்காபிஷேக நிகழ்வுக்கு சென்று விட்டு துவிச்சக்கரவண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்மணியினை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அப்பகுதியில் உள்ள சிசிடிவி கமராவின் உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா-60)

## மோட்டார் சைக்...

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 47 வயதான துசாந்தி என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு விபத்தில் பலியாகியுள்ளார்.

சங்குப்பிட்டிப் பகுதியில் இருந்து நாவற்குழி நோக்கி வந்த டிப்பருடன் நாவற்குழிப் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்த பெண் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் சடுதியாக வீதியை விட்டு விலகி டிப்பருடன் மோதுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் இறந்த பெண்ணிற்கு ஏற்கெனவே ஒரு கால் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-8,30,114)

## நாட்டுக்கு தேவை...

பட்டிருந்த தடை நீக்கப்படுவது பொருத்தமற்றது.

அத்துடன் இதனைப் போன்ற ஏற்றுக் கொள்ள முடியாத மற்றும் குறைப்பாடுகளுடன் கூடிய பல விடயங்கள் இந்த திருத்தச் சட்டத்தில் காணப்படுகின்றன.

பல்வேறு சட்டமூலங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பும் சந்தர்ப்பம் இந்த புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் இரத்துச் செய்யும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பும் விடயத்தை மாற்ற வேண்டுமாயின் அது குறித்து ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம் எனவும் கெவிந்து குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## இளைஞன்...

நிலையில் வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இடத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பாலசுப்பிரமணியம் முருகேசு என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-8)

## சுவர் விழுந்ததில்...

ஞன் வவுனியா நகர்ப் பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கட்டுமாணப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில் பணியில் ஈடுபட்டிருந்த அவரின் மீது கடந்த 30ஆம் திகதி சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் படுகாயமடைந்த இளைஞன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் அவர் உயிரிழந்தார்.

சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த காந்தி (வயது- 24) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். (ஞா)

## காற்று...

என்பதால் சிறிய படகுகளில் கடற்றொழிலுக்கு செல்வோர் இன்று பகல் 12 மணி வரை தொழில்களில் ஈடுபட வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதேவேளை, இன்று நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் காற்றுடன் கூடிய மழைவீழ்ச்சி இருக்கும் என்று வானிலை மையம் எதிர்வு கூறியுள்ளது. (ஞா)

## நான்கு வாள்...

வடலியடைப்புப் பகுதியில் வைத்து சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார். அத்துடன் அவரிடம் மீட்கப்பட்ட 4 வாள்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கைது நடவடிக்கை நேற்றிரவு இடம்பெற்றது.

பல ஆண்டுகளுக்கு முன்பான 4 வாள்களை விற்பனை செய்வதற்கு சந்தேகநபர் முற்பட்டுள்ளார்.

இந்த முயற்சி யாழ்ப்பாணம் சிறப்பு அதிரடிப் படையினருக்கு தெரிய வந்ததையடுத்து வாள்களை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் நேற்றிரவு அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஞா-104)

## எதிர்...

கள் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகள், அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.

அதாவது, தனி நபருக்கு நிறைவேற்று அதிகாரம் தடையின்றி முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாத்திரமே குறித்த 20ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என இந்தக் கட்சிகள் தொடர்ந்து கூறி வருகின்றன.

இந்நிலையில் எதிர்க்கட்சியை சேர்ந்த ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## மணி...

னணியின் உறுப்புரிமையில் இருந்து சட்டத்தரணி வி.மணிவண்ணன் நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே மணிவண்ணனைத் தலைமை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அமைப்பாகச் செயற்படும் என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த அமைப்பில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் பார்த்தீபன் உட்பட பல மாநகர, நகர, பிரதேச சபை உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர்களும் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஞா)

## 13ஆவது திருத்...

டுள்ளது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் 19ஆவது திருத்தம் ஆகியவற்றில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கத்தில் ஒரு தரப்பினர் கூறி வருகின்றனர்.

அதேபோன்று அரசாங்கத்தில் இன்னொரு தரப்பினர், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்குவதே நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுத்தரும் என வலியுறுத்தி வருகின்றனர்.

02

### செவன

திகதி 06/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 293
ஆங்கில எழுத்து: F
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 32 41 64 65
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

### மெகா பவர்

திகதி 06/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0604
வெற்றி எழுத்து: A
சுப்பர் இலக்க: 01
வெற்றி இலக்கங்கள்: 17 58 63 72

### மஹஜன சம்பத

திகதி 2020/09/06
சீட்டிழுப்பு இலக்கம் 4237
ஆங்கில எழுத்து: E
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 7 7 5 3 1 9
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
சீட்டிழுப்பு திகதி 06-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2532
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 29 38 58 59
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2020.09.06
சீட்டிழுப்பு இலக்கம் - 312
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 27 38 59 71
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1207
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 06.09.2020
தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: P 18 45 58 77
SUPER 500 விசேட இலக்கம்: 4 7 2 2
54,545,656.40
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

### அத கோடிபதி

ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1033
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,426,315/-
வெற்றி இலக்கங்கள்: 14 22 39 41
ஆங்கில எழுத்து: X
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 1591
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 400
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.06
சீட்டிழுப்பு இல. : 3363
வர்ணம் : இளஞ்சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,511,658.50
வெற்றி இலக்கங்கள்: 19 37 60 75
ஆங்கில எழுத்து: L
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 8672
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா / ஜய ஜக்பொட்

சீட்டிழுப்பு வாரம்: 621
வர்ணம்: மஞ்சள்
திகதி: 06.09 2020
ஞாயிற்றுக்கிழமை
Q 05 15 40 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,721,735
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

### ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 06.09.2020 | 2914 | ஊதா |

வெற்றி இலக்கங்கள்: 04 08 22 45
கன்னி
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 4257
ரூ.100 பரிசுக்குரிய 536
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,655,400
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
www.dlb.lk
தொ. பே. : 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



மீண்டும்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-245)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார்,
மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலுள்ள
O/L, A/L படித்தவர்களுக்கான புதிய வேலை வெற்றிடங்கள்.
வயதெல்லை : 18-30
சம்பளம் : 15,000/= - 28,000/= (3821)

**தொடர்புகளுக்கு : 077 934 6224**

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**



| | | | |
|---|---|---|---|
| கனடா | - 650/= | ஜேர்மனி | - 1150/= |
| லண்டன் | - 1050/= | பிரான்ஸ் | - 1150/= |

**அருள்**
தபால் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

**அருள்**
பெற்றோல் செற் எதிரில்
பிரதான வீதி, நெல்லியடி.

**அருள்**
இ.போ.ச. பஸ் டிப்போ எதிரில்
பிரதான வீதி, பருத்தித்துறை.



(C-255)

**தொ. இல:- 076 443 1576**

## AIRR LINE

வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை
**கனடா - 650/=**

கே.கே.எஸ். வீதி,
உப்புமடம்.
**Tel : 076 443 1575** (C-256)

**விரைவு பொதிகள் சேவை**

## V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-112)

**0768226240**

## காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும் ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு
மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற
யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள்
யாழ்.பிராந்தியம்

- ◎ **முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
- ◎ **உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**

(3769)

**முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**
- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**
- ◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
- ◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை
12.09.2020க்கு முன்னர் **sasisuganya17@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
**218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

DTPE CAMPUS

## 2020 – செப்டெம்பர் மாதத்திற்கான பட்டப்படிப்புகளின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

**P - T - O**

**B.A in English (Top -up)** கால அளவு :- 1 வருடம், நுழைவுத் தகைமை :- HND / Advanced Diploma அல்லது சம்பந்தப்பட்ட துறையில் 3 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**B.B.A - Bachelor of Business Administration** | **B.Sc in Tourism and Hospitality Management** | **B.Sc in IT**
கால அளவு :- 1 வருடம், நுழைவுத் தகைமை : HND / Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**B.Sc in Civil Engineering** கால அளவு :- 1 வருடம், நுழைவுத் தகைமை : HND /Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

**M.B.A - Master of Business Administration** கால அளவு :- 18 மாதங்கள், நுழைவுத் தகைமை : Any Bachelor Degree அல்லது முகாமைத்துவத் துறையில் 10 வருட அனுபவம்.

முதலில் பதிவு செய்யும் 10 மாணவர்களுக்கு 10% கட்டண கழிவு வழங்கப்படும்.

- ◈ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்ட கற்கைநெறிகள்.
- ◈ மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
- ◈ அரச பல்கலைக்கழக மற்றும் அரச உயர்கல்வி நிறுவன விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகிறது.

**தொடர்புகளிற்கு** (3802)

**No. 925, K.K.S Road, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.**
Level 4, No. 174 George R.De. Silva Mawatha, Colombo 01300
தொலைபேசி இல:-021 468 0964, 077 028 8711, 077 975 4225

## விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு
பொதிகள் சேவை 3 -5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன



**Lanka Cargo Worldwide Express**

**315, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (3806)
**021 221 1995**
**076 283 2397**

**ICOF - வளர்பிறை உளவளத்துணை நிலையம்**

## உளவளச் சிகிச்சைப் பயிற்சி நெறி

(Psychotherapy Training Program)

வளர்பிறை உளவளத்துணை நிலையத்தியத்தில் புலமை வாய்ந்த வளவாளர்களினால் உளவளச் சிகிச்சைப் பயிற்சி நெறி 12.09.2020 அன்று எமது நிறுவனத்தில் இரண்டாம் பிரிவினருக்கான வகுப்பு (**2nd Batch**) ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக்காலம் :- 100 மணித்தியாலங்கள், பிரதி சனி. ஞாயிறு (9.00 - 1.00)
- பயிற்சியின் பின்னர் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கல்வித் தகைமை :- உள சமூகத் துறையுடன் தொடர்புடையவர்கள்
- விண்ணப்ப முடிவுத் திகதி :- 11.09.2020
- தகுதியானவர்கள் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம்:- 2000.00

NLB
Speech Therapy
CBT
REBT
IPT
Gestalt Therapy

OMI

**வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)**
இல 05,பிளச்சஸ் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
**Tel : 077 266 0209, 021 222 8238** (3785)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.